Annual Subscription Rs. 90/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர்–26 இதழ் – 8 ஆகஸ்ட் 2013

தனிப்பிரதி ரூ.9/-



அவர் மேல் மாளிகை முழுவதும் இசைவாய்
இணைக்கப்பட்டு நீங்களும் ஆவியினாலே
தேவனுடைய வாசஸ்தலமாகக்கூட்டிக் கட்டப்
பட்டு வருகிறீர்கள். (எபேசியர் 2:2122)

# 16th Annual Bible Lectureship

# 16 ஆம் வேதாகம கருத்தரங்கம்

(அரசு விடுமுறை நாட்களில்)

## 2013, அக்டோபர் 14,15(திங்கள், செவ்வாய்)

இடம்:

## கிறிஸ்துவின் சபை வளாகம்

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638701.

- வெளியூரிலிருந்து வருபவர்களுக்கு உணவும் தங்குமிடமும் இலவசம்.
- தங்குவதற்கு ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனி இடம் உண்டு.

★ ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

★ முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.

★ இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.

★ அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை/அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தைத் தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

## ஆசானின் அறிவுரையிலே ...


1. ஆசிரியர் உரை - 1
2. ஏன் நாங்கள் பரலோகத்தில் நம்பிக்கை வைக்கிறோம்? - 10
3. பெண்கள் பகுதி - 14
4. வாலிபர் பகுதி - 17
5. சிறுவர் பகுதி - 20
6. தேவனுடைய நண்பன் - 22
7. மனுஷர் மேல் விழுந்த கடமை - 25
8. வாசனீதியான கிறிஸ்துவின் சபை - 29

THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 26 AUGUST 2013 Issue - 8

ஆசிரியர் உரை

# என் ஆவி பிரியுமட்டும் ... உத்தமத்தை ... விலக்கேன்

இப்பூமியின் வாழ்க்கையில், நம் ஒவ்வொருவருக்கும் பிடித்த மானவர்களென்றும், மிகவும் பிடித்தமானவர்களென்றும் சிலபேர் இருப்பர். அப்படிப்பட்டவர்களை நாம் அதிகமாக நேசிப்போம், மிகவும் உயர்வாக மதிப்போம். அவர்களைப் பற்றி நாம் பிறரிடம் பேசும் போதும், சில நேரங்களில் அவர்களை மற்றவர்களுக்கு அறிமுகம் செய்யும்போதும், மிகச் சிறந்த வார்த்தைகளைப் பொறுக்கி யெடுத்து அவர்களுக்காகப் பயன்படுத்தி, அதன் மூலம் அவர்கள் மீது நமக்கிருக்கும் அன்பையும், மரியாதையையும் வெளிப்படுத்துவோம். இப்படிச் செய்வது நம் எல்லோருக்கும் பொதுவான ஒன்று தான். ஆனால், இது மனிதர்களாகிய நமக்கு மட்டும் தான் சொந்தம் என்று நாம் நினையாதபடி, இதே பாணி, பரிசுத்த வேதாகமத்திலும் பரலோகத்தின் தேவனால் கடைப்பிடிக்கப்பட்டிருப்பது கவனிக்கத் தக்கது. ஆம், பல தேவதாசர்களை, தேவன் சிறந்த அடைமொழி களால் நமக்கு அடையாளம் காட்டியிருக்கிறார்.

பெருவெள்ள காலத்துப் பிரசங்கியாகிய நோவாவை தேவன், நீதிமான் என்றும், உத்தமன் என்றும் கூறுகிறார் (ஆதி 6:9). இதே பதங்கள், புதிய ஏற்பாட்டில், இயேசுவின் சரீரத்தைப் பிலாத்துவிடம் வாங்கி அடக்கம் செய்த அரிமத்தியா ஊரானாகிய யோசேப்புக்கும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது (லூக். 20:50,51). மேலும், அப்போஸ் தலர் 18-ஆம் அதிகாரத்தில், அலெக்சந்திரியா பட்டணத்து அப்பொல்லோ என்பவனைக் குறித்து சாதுரியவானென்றும்,

வேதாகமங்களில் வல்லவன் என்றும் தேவனால் எடுத்துச் சொல்லப் பட்டிருக்கிறது. (18:24) இப்படி வேதாகமம் சிலருக்கு சிறப்பான அறிமுகம் கொடுத்தாலும், பக்தன் யோபுவுக்குத் தேவனால் கொடுக் கப்பட்ட அறிமுகம் போல வேறு யாருக்கும் கொடுக்கப்படவில்லை யென்று நாம் தைரியமாகவே அடித்துக்கூறலாம். ஒருவேளை, ஏசாயா 9:6-ல் நம்முடைய இரட்சகர் இயேசுவுக்கு, அவர் பிறப்பதற்கு 700 ஆண்டுகளுக்கு முன்பாகவே, "அதிசயமானவர் ஆலோசனைக் கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்தியபிதா, சமாதான பிரபு " என்று சொல்லப்பட்டிருக்கிறதே என்று நீங்கள் கேட்கலாம். அது நியாயம் தான். ஆனால், அவர் தேவமைந்தன் ஆயிற்றே! அவருக்கு ஈடும், இணையும் உண்டா? முழுக்க முழுக்க நம்மைப் போன்றதொரு மனிதனாகிய யோபுவை மீட்பரோடு ஒப்பிட முடியுமா? முடியாது தானே.

சரி, மிகச் சிறந்ததொரு அறிமுகத்துக்குச் சொந்தக்காரனாகிய யோபுவைக் குறித்து தேவன் தமது வசனங்களில், இவ்விதம் வர்ணிக் கிறார். " *உத்தமன், சன்மார்க்கன், தேவனுக்குப் பயப்படுகிறவன், பொல்லாப்புக்கு விலகுகிறவன்* " (யோபு 1:1). இந்த நான்கு சொற் றொடர்களையும் கவனித்தால், இப்படியும் ஒரு மனிதன் இருந்திருப் பானா என்று தான் எண்ணத் தோன்றுகிறது. இன்னும், இவ்வார்த்தை களுக்கான பொருளை ஆராய்ந்தால், இவனைப் பற்றி பேசுவதற்கு நமக்கு என்ன அருகதை இருக்கிறதென்று நினைக்கச் செய்கிறது!

இப்பொழுது இவனுக்காக தேவன் பயன்படுத்தியிருக்கும் வார்த்தைகளின் பொருளை கவனிப்போம். " *உத்தமன்* " என்பதற்கான பொருள், ஒரு போதும் பாவமே செய்யாத நிலையல்ல. ஆனால், பாவத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, மீண்டும் தன்னை பாவத்திற்கு அடிமைப்படுத்தாதொரு நிலை என்று சொல்லலாம். இங்கே நான் ஒன்றைக் கேட்கிறேன். இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு விட்டேன் என்று சொல்லுகிற அநேகரால் இந்த உத்தம நிலையை எட்டிப்பிடிக்க முடிந்திருக்கிறதா? சிந்திப்போம். அடுத்து, சன்மார்க்கன். இவ்வார்த்தை நமக்கு அதிக பழக்கமில்லாத வார்த்தை போல தெரியும். ஆனால், இது நமக்கு அதிகம் பழக்கமுள்ள துன்மார்க் கத்திற்கு எதிரான வார்த்தை. ஒழுக்கக்கேடற்ற, நீதிநெறி பிறழாத வாழ்க்கையை அடையாளப்படுத்துவது. மூன்றாவது, " *தேவனுக்குப் பயப்படுகிறவன்* ". இன்றைக்குப் பலர், காரணம் தெரியாமல் ஒரு தெய்வத்திற்கும், தெய்வங்களென்று கருதப்படுபவைகளுக்கும் பயப் படுகிறார்களல்லவா, அது போன்ற பயமல்ல யோபுவின் பயம். மாறாக, சர்வவல்ல தேவனுடைய மகிமை, மாட்சிமை, மகத்துவம் போன்றவற்றை அறிந்து, உணர்ந்து, அதனடிப்படையில் பெற்றுக் கொண்ட பயம். நான்காவது, " *பொல்லாப்புக்கு விலகுதல்* ". பொல்லாப்பு எது என்றும், பொல்லாப்பு அல்லாதது எது என்றும்,

நமக்குக் காட்டுவது தேவனுடைய வார்த்தைகள் தான். அப்படியானால், இவன் தேவனுடைய வார்த்தைகளைத் தெரிந்து, அதனடிப் படையில், பொல்லாப்பு எது அல்லது எவைகள் என்பதைக் கண்டறிந்து, அவைகளுக்குத் தன்னை முற்றும் விலக்கி காத்துக் கொண்டதோர் வாழ்க்கை நடத்தியவன். அப்பப்பா, எவ்வளவு பெரிய மனிதன் இந்த யோபு என்று எண்ணிப் பாருங்களே! தேவன், இவனைப் பற்றி இத்தோடு நிறுத்தினாரா? இல்லை. இன்னொன்றும் இருக்கிறது கவனியுங்கள். " *இவனைப் போல் பூமியில் ஒருவனும் இல்லையாம்* " (யோபு 1:8). இதற்கு மேல், என்ன வேண்டும்?

சரி, இப்படிப் பரலோகத்தின் தேவனாலே வெகுவாக மெச்சப் படுமளவுக்கு, வியத்தகு வாழ்க்கை வாழ்ந்த பக்தன் யோபு, தன் வாழ்க்கையின் ஒரு கட்டத்தில், தனக்கு ஏற்பட்ட கதியைக் கேள்விப் பட்டு தனக்கு ஆறுதல் சொல்லவும், தன்னோடு சேர்ந்து பரிதபிக்கவும், தூரத்திலிருந்து வந்த நண்பர்களிடம் மிகவும் உறுதிப்பட, " *என் ஆவி பிரியுமட்டும், என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன்* " என்று கறாராகக் கூறுகிறான் (யோபு 27:5) தேமானியனான எலிப்பாசும், சூகியனான பில்தாத்தும், நாகமாத்தியனான சோப்பாரும், தங்கள் நண்பனாகிய யோபுவின் சரீரத்திலும், மனத்திலும் ஏற்பட்ட காயங் களுக்கு தங்கள் வார்த்தைகளால் மருந்து போடுகிறோம் என்று எண்ணிக்கொண்டு, " *வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சும்* " வேலையை வெகுநேர்த்தியாகச் செய்தார்கள். சொல்லப் போனால், யோபுவுட னான அவர்களின் வாதமும், பிரதிவாதமும், ஒருவனை ஆடை யில்லாமல் சுடுமணலில் போட்டு புரட்டுவது போலும், வாணலியில் போட்ட வறுத்தெடுப்பது போலவுமே இருந்தது. சிநேகிதன் எல்லாக் காலத்திலும் சிநேகிப்பான் (நீதி. 17:17) என்ற ஞானியின் கூற்றைத் தூக்கிக் குப்பைத் தொட்டியில் போட்டவர் களாகவே தங்கள் பேச்சை ஆரம்பித்து, தொடர்ந்து, பிறகு முடிக்கவும் செய்தனர்.

ஒரு கட்டத்தில், யோபுவின் நண்பர்கள் மூவரும் ஏகோபித்த குரலில், " *நான் பாவம் செய்தேன், ஆகவே, மனந்திரும்புகிறேன்* " என்று யோபு சொல்லியே ஆக வேண்டும். அப்பொழுது தான் அவனுக்கு விடுதலை என்று நெருக்க ஆரம்பித்தனர். அப்பொழுது தான், கொஞ்சம் பொறுமையிழந்த இந்தப் பொறுமையின் சிகரம், அந்தப் பேச்சுக்கே இடமில்லையென்பதை அவர்கள் திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ளும்படி, என் ஆவி பிரியும் மட்டும், என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன் என்று இடியாய் முழங்கினார். வீம்புக்கோ, வீராப் புக்கோ யோபு இந்த வார்த்தைகளைப் பேசாமல், விசய ஞானத் தோடே தான் பேசியிருக்கிறார் என்பதை, பிற்பாடு பரலோகத்தின் தேவன் இவனுக்குக் கொடுக்கும் சாட்சியிலிருந்தும், இவன் பெற்றுக் கொண்ட இரட்டிப்பான ஆசீர்வாதத்திலிருந்தும் நாம் தெரிந்து கொள்ள முடியும்.

ஆனாலும், யோபு இவ்வார்த்தைகளைத் தன் நண்பர்களிடம் கூறிய பொழுது, அவனுக்கிருந்த சூழ்நிலையைக் கண்முன் கொண்டு வந்து பார்த்தால் உடம்பெல்லாம் சிலிர்க்கிறது. சில வேளைகளில், ஒரு வார்த்தையோ அல்லது வாக்கியமோ எந்தச் சூழ்நிலையில் சொல்லப்படுகிறதென்பதைப் பொறுத்து அதற்கான முக்கியத்துவம் இருக்கும். உதாரணமாக, கிறிஸ்தவம் " மன்னிப்பின் மார்க்கம் " என்று உலகெங்கும் அங்கீகரிக்கப்பட்டதற்குக் காரணம், இயேசு, மலைப் பிரசங்கத்திலோ அல்லது ஊழிய நாட்களிலோ மன்னிப்பு பற்றிப் பேசியது மட்டுமல்ல. மாறாக, கொல்கொதா மலையில், அந்தக் கொடுஞ் சிலுவையில், " *பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே*" என்று சொன்னது தான். (லூக் 23:34). ஆக, சொல்லப்படும் ஒன்று, எந்தச் சூழ்நிலையில் சொல்லப்படுகிறதென்பதைப் பொறுத்து அதன் முக்கியத்துவம் கூடுகிறது அல்லது குறைகிறது.

அப்படியானால், பக்தன் யோபு, என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன் என்று எந்தச் சூழ்நிலையில் சொன்னார் என்பதை நாம் கவனிக்க வேண்டுவது அவசியம். அப்பொழுது தான், யோபுவின் உத்தமத்தின் மேன்மை நமக்கு விளங்கும். அப்பொழுது தான், அந்த உத்தமம், நம்முடைய வாழ்க்கைக்கு என்ன பாடம் கற்றுக் கொடுக்கிறதென்று நாம் அறிந்து கொள்ள முடியும். அப்பொழுது தான், அவன் உத்தமத்தை நாமும் பின்பற்றி வாழ முடியும். இப்பொழுது யோபு சொன்ன சூழ்நிலையைக் கவனிப்போமா?

### I. தனது செல்வங்களை இழந்தான்

" *என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன்*" என்ற அவ்வார்த்தைகளை அவன் உதிர்த்த பொழுது, தன் செல்வங்களை இழந்திருந்தான்.

யோபுவுக்கு இருந்த செல்வங்கள் கொஞ்சமா என்ன? இன்றைக்கு செல்வந்தர்களுக்கான தரப்பட்டியல் வெளியிடுவது போல, அன்றைக்கு ஒரு வேளை தரப்பட்டியல் வெளியிட்டிருந்தால், இவன் தான் நம்பர் ஒன்றாக இருந்திருப்பான் என நினைக்கிறேன். 7000 ஆடுகள். ஒரு 100 ஆடுகளும் அதற்கான மேய்ச்சல் நிலமுமிருந்தால், இன்றைக்கு ஒருவன் பண்ணையார் என்று அழைக்கப் படுகிறான். அப்படியானால், யோபுவை எப்படி அழைப்பது? சொல்லத்தேவையில்லை அப்படித்தானே! அடுத்து, 3000 ஒட்டகங்கள். ஆடுகள் ஆயிரங்களில் என்பது ஓரளவுக்கு விளங்குகிறது. ஆனால், ஒட்டகங்கள் 3000 என்பது சரியாக அறிவுக்கு எட்டவில்லைதானே. ஒருவேளை, போக்குவரத்து வசதிகள் இல்லாத அந்நாட்களில், போக்குவரத்து ஊர்திகளாக ஒட்டகங்களே பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அப்படியானால், அன்றைய நாட்களின் போக்குவரத்து

அனைத்தையும் தன் கட்டுப்பாட்டிலே வைத்து, பஸ் அதிபர் என்பது போல "ஒட்டக அதிபராக" இருந்திருப்பானோ நம் யோபு. அடுத்து, 500 ஏர்மாடுகள். இரண்டு ஏர்மாடுகள் போதும், 5-10 ஏக்கர் வரை உழுவதற்கு. அப்படியானால், இவனுக்கிருந்த விளை நிலத்தின் அளவும், நிலபுலங்களின் அளவும் தான் எவ்வளவு? இவை போதாதென்று கழுதைகள் வேறு 500 ஆம். பொதி சுமப்பதற்கான மிருகம் தான் கழுதை. அப்படியானால் இவ்வளவு கழுதைகள் எதற்கு? 500 கழுதை களும் எதைச் சுமந்திருக்கும்? பரந்து விரிந்த அவனது நிலங்களில் விளைந்து, அறுத்து, களங்களில் குவிந்தவைகளை வீடு கொண்டு வந்து சேர்க்க கழுதைகள் பயன்பட்டிருக்குமோ? நம்முடைய ஊகம் சரியானால், இவன், "*பஸ் அதிபராக*" மாத்திரமல்ல, "*லாரி அதிபராகவும்*" இருந்துள்ளான்.

அன்பர்களே, இவையனைத்தையும், ஒரே நாளில் இழந்து விட்ட நிலையில் தான், (யோபு 1:1317) "*என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன்*" என்று யோபு கூறியுள்ளான் என்பதை கவனிக்க மறந்து விடாதீர்கள். இங்கே, நம்முடைய உத்தமம் எந்தளவு உள்ள தென்பதை நிதானித்துப் பாருங்கள்.

**II. பெற்று வளர்த்த பிள்ளைகளை இழந்தான்.**

"என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன்" என்ற போது, தான் ஆசையோடு பெற்று, பாசத்தோடு வளர்த்த பிள்ளைகளனைவரையும் ஒரு சேர இழந்திருந்தான்.

வேத வசனங்கள் அவனுக்கு, 7 குமாரர்களும், 3 குமாரத்திகளும் பிறந்தார்கள் என்று சொல்கிறது (1:2). இந்த யோபு, தன் பிள்ளைகளை எவ்வளவு நேசித்தான் என்பதற்குச் சான்றாக யோபு 1:5 நாம் காட்டலாம். அங்கே, தன் பிள்ளைகள் இருதயத்திலே தேவனை தூஷித் திருப்பார்கள் என்று சொல்லி, எல்லோருடைய "இலக்கத்தின் படியும் சர்வாங்க தகன பலி செலுத்துவானாம்". இன்றைக்குப் பிள்ளைகள் வெளிப்படையாகச் செய்த தவறுகளுக்கே வக்காலத்து வாங்கும் பெற்றோர்களைத் தான் சமுதாயத்தில் பார்க்க முடிகிறதேயொழிய, மற்றபடி பிள்ளைகளின் பாவங்களுக்குப் பரிகாரம் தேட முயற்சிக்கும் பெற்றோர்கள் எங்கே இருக்கிறார்கள்? பூத கண்ணாடி வைத்துத் தேடினாலும் கண்டுபிடிக்க முடியாது. ஆனால், யோபு பிள்ளைகளை நேசித்து, அவர்கள் ஆத்தும நலனில் அக்கறை செலுத்தியுள்ளான்.

இப்படி, தான் இவ்வளவு நேசித்த பிள்ளைகளை நொடியில் இழந்தான். பிள்ளைகள் பெற்றோரை இழப்பது வேதனை தரத்தக்கது தான் என்றாலும், பெற்றோர்கள் பிள்ளைகளை இழக்கும் துக்கத்திற்கு அது ஈடாகாது. பெற்றோரின் உடம்பில் பிள்ளைகளின் இரத்தம் ஓடு வதில்லை. ஆனால், பிள்ளைகளின் உடம்பில் பெற்றோரின் இரத்தம்

ஓடுகிறது. பெற்றெடுத்த பிள்ளைகளில் ஒன்றை இழப்பதே தாங்க முடியாததாக இருக்கும்பொழுது, பத்துப் பேரையும் ஒரு சேர இழப்ப தென்பதை எண்ணிப்பார்க்கவே பயங்கரமாக உள்ளது. யோபுவின் மனம், எப்படித் துடியாய் துடித்திருக்குமென்று கற்பனை செய்து பார்க்கவே மனம் மறுக்கிறது. வேத வசனங்கள் அவன் துக்கம் மகா கொடிய துக்கம் என்றே விளம்புகிறது. இப்படிப்பட்ட துக்கம் வேறு யாருக்கும் வரவேண்டாமென்றுதானே எண்ணத் தூண்டுகிறது.

**III. சரீர சுகத்தையும், மனைவியின் அன்பையும் இழந்தான்.**

" *என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை விட்டு விலக்கேன்* " என்று அவன் சொன்ன போது, தன் சரீர சுகம் அனைத்தையும், மனைவியின் அன்பையும் இழந்திருப்பான்.

நோயற்ற வாழ்வின் அருமை நோய் வந்த பிறகு தான் ஒருவனுக் குத் தெரியும். ஒருவனுக்கு வரும் வியாதிகளையெல்லாம் நாம் ஒரே ரகத்தில் எடுத்துக் கொள்ள முடியாது. அவைகளில், மரணத்துக்கேது வானவைகளும் உண்டு. மரணத்துக்கேதுவற்றவைகளும் உண்டு. இங்கே யோபுவுக்கு வந்த வியாதி முதல் ரகம். கொடிய வியாதி. உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை மட்டும் கொடிய பருக்கள். இந்த வியாதியின் தன்மை பற்றிக் கூறும் ஒரு வேத அறிஞன். " *இது குஷ்டரோகமல்ல, ஆனால், குஷ்டத்திற்கு எந்த வகையிலும் குறைவானதல்ல* " என்று விளக்குகிறார். அப்படியானால், அந்த வியாதியால், அவன் அடைந்த சரீர வேதனையும், அது தந்த மன வேதனையும் எந்தளவு இருந்திருக்குமென்று எண்ணிப் பாருங்கள்.

அவனுக்கு ஏற்பட்ட வியாதியின் கொடுமையைக் கண்ணுற்ற அவன் மனைவி, அவனைப் பார்த்து, மிகவும் கிண்டலாக, " *நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ?* " என்று சொன்னதோடு, அட மனுஷா, உன்னை இவ்வளவு பாடுபடுத்தும் தேவனை தூஷி என்று சீண்டிவிடுகிறாள். (2:9) அவன் வியாதி, கடுமையானது தான் என்பதற்கு அவன் மனைவியின் இவ்வாக்கியம் தவிர வேறு என்ன சான்று வேண்டும்? போதாதற்கு அவனுடைய நண்பர்கள் வேறு, தங்கள் கண்களை ஏறெடுத்துப் பார்த்து, அவனை உருத்தெரியாமல் சத்தமிட்டு அழுதிருக்கிறார்கள் (2:11) யோபுவே கூட, தன் பிறந்த நாளை சபித்திருக்கிறானென்றால் பார்த்துக் கொள்ளுங்களே! (3:3) அவன் சரீரத்தில் பட்ட வேதனைகளுக்கு இதற்கு மேல் விளக்கமே தேவையில்லை.

அன்பானவர்களே ! இப்படிப்பட்ட அகோர நிலையில் தான், இப்பழம் பெரும் பக்தன் யோபு, " *என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன்* " என்று கூறியுள்ளான். நாமும் தான் நம்மை பக்திமான்கள் என்று அழைத்துக் கொள்கிறோம். யோபுவுக்குப் பக்கத்தில் போக முடியுமா?

## VI. நண்பர்களின் நம்பிக்கையை இழந்ததோடு, கண்டனத்துக்கும் உள்ளானான்.

" *என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன்* " என்று அவன் முழங்கிய போது, தன் பிராண சிநேகிதர் களின் நம்பிக்கையை இழந்ததோடு, அவர்களின் கடுமையான கண்டனத்துக்கும் உள்ளாகியிருந்தான்.

யோபுவின் புத்தகத்தின் பெரும்பகுதி, அவனுக்கும், அவனது நண்பர்களுக்கும் இடையே நடந்த உரையாடல்களைக் கொண்ட தாகவே உள்ளது. இந்நண்பர்கள் மூவரும், யோபு அழைத்து வந்தவர் களல்ல. மாறாக, நடந்தவைகளைக் கேள்விப்பட்டு வந்தவர்கள். வந்து யோபுவுக்கு நேர்ந்த கதியைக் கண்டு, கலங்கி, தங்கள் சால்வைகளைக் கிழித்து, தங்கள் தலையின்மேல் புழுதியை தூற்றிக் கொண்டவர்கள். அத்தோடு, அவன் நிலையைக் கண்டு விம்மி, விக்கி ஒரு வார்த்தையும் பேசாமல், இரவு பகல் ஏழுநாள் அவனோடே கூடத் தரையில் உட்கார்ந்தார்கள்.

இந்தளவு யோபுவை நேசித்த நண்பர்களின் நம்பிக்கையை யோபு இழந்து, இங்கே நிராதரவாகக் காட்சி தருகிறான். ஆம், ஆறுதல் தந்து தேற்றுவார்களென்று எதிர்பார்க்கப்பட்ட நண்பர்கள், யோபுவை வார்த்தைகளால் வாட்டி வதைத்தனர். தேமானியனான எலிப்பாசு, " *குற்றமில்லாமல் அழிந்தவன் உண்டோ? என்றும், நான் கண்டிருக்கிற படி அநியாயத்தை உழுது, தீவினையை விதைத்தவர்கள் அதையே அறுக்கிறார்கள்* " (4:7,8) என்றும் சொல்லி, தப்புத் தாளத்திற்கு தாயம் போட்டான். இவன் பேசுவதைக் கண்டு அதிர்ந்து போன யோபு, இப்படிப்பேசி என்னை வார்த்தைகளால் வதைக் காமல், " *நான் எதிலே தவறினேனோ அதை எனக்குத் தெரியப் படுத்துங்கள்* " என்று கெஞ்சுகிறான் (6:24) ஆனால், கிஞ்சித்தும் இரக்கமில்லாத பில்தாத்தோ, " *தேவன் நியாயத்தைப் புரட்டுவாரோ? என்று கூறியதோடு,* " *தேவன் உத்தமனை வெறுக்கிறதில்லை* " என்ற கண்டுபிடிப்பையும், தன்னுடைய மேதாவித் தனத்தையும் வெளிப் படுத்துகிறான். (8:3,20) இந்த உண்மை யோபுவுக்குத் தெரியாதா என்ன? தன்னுடைய இரண்டு நண்பர்கள், இப்படி அர்த்தமில்லாமல் பேசி அடம் பிடிப்பதைக் கண்ட யோபு, இனி இவர்களிடத்தில் பேசி எந்தப் பயனும் இல்லையென்று கண்டு, தேவனுடைய மகத்துவங் களைப் பேச ஆரம்பிக்கிறான். "ஆராய்ந்து முடியாத பெரிய காரியங் களையும், எண்ணி முடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார் " (9:10) என்றும், " *இதோ, அவர் பறித்துக் கொண்டு போகிறார், அவரை மறிப்பவன் யார்? நீர் என்ன செய்கிறீர் என்று அவரைக் கேட்பவர் யார்?* " என்றும் பேச ஆரம்பித்தான். (9:12). இதைக்கண்ட அந்த மூன்றாவது நண்பனாகிய சோப்ளாங்கி சோப்பார். " *வாய்ச் சாலகன் நீதிமானாய் விளங்குவானோ? என்று கூறி* ", யோபுவை ஒரு வாயாடி என்று வாய் கூசாமல் கூறுகிறான் (11:2).

இவர்களின் சொல் அடி தாங்க முடியாத யோபு, ஒரு கட்டத்தில், கையெடுத்துக் கும்பிடாத குறையாக, இப்போதும் நீங்கள் எல்லாரும் போய் வாருங்கள் என்றான் (17:10) இச்சமயத்தில், அவன் இருதயம் எப்படியிருந்திருக்குமென்று எண்ணிப் பாருங்கள். அப்போதும், அவர்கள் தங்கள் போக்கை மாற்றிக் கொள்ளாததைக் கண்டு கண்ணீரும், கம்பலையுமாய், " *நீங்கள் எந்த மட்டும் என் ஆத்துமாவை வருத்தப்படுத்தி, வார்த்தைகளால் என்னை நொறுக்கு வீர்கள்?* " என்று அலறியுள்ளான்.

அருமையான தேவப்பிள்ளையே, தன் நண்பர்கள், இப்படித் தன்னை ஈனப்படுத்திய நிலையிலும், யோபு, " *என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன்* " என்று கூறியுள்ளதை கவனிக்க மறந்து விடாதீர்கள். கவனிப்பதோடு நிறுத்தியும் விடாதீர்கள், செயல்படுத்துங்கள்.

## V. மரியாதையை இழந்தான்.

" *என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன்* " என்று சொன்ன போது, தன் மரியாதையையும் இழந்து விட்டவனாக இருந்துள்ளான் என்பதை நாம் கவனிக்கத் தவறக் கூடாது.

ஒரு மனிதனுக்கு மானமும், மரியாதையும் மிகவும் முக்கியம். உணவு இல்லாமலும், உடையில்லாமலும் கூட எப்படியோ நாட்களைக் கடத்தலாம். ஆனால், மரியாதை இல்லாமல் வாழ்வது அவ்வளவு சுலப மானது அல்ல. ஒருவேளை, ஆரம்ப முதலே மரியாதை அற்ற ஒரு வாழ்க்கை வாழ நேர்ந்திருந்தால் அது வேறு விஷயம். ஆனால், மரியாதையோடு வாழ்ந்து, பிறகு அதை இழக்க நேருவது வேதனையிலும் வேதனை. செய்தித்தாள்களிலே இடம் பிடிக்கிற அநேக தற்கொலைகளுக்குக் காரணம் மானப் பிரச்சினையும், மரியாதைப் பிரச்சினையும் தான்.

யோபுவுக்கு இருந்த செல்வத்திற்கும், செல்வாக்கிற்கும், ஒழுக்கத்திற்கும், பக்தி நிலைக்கும் அவன் எவ்வளவு மரியாதையோடு வாழ்ந்திருப்பான் என்பதை நாம் சொல்லவும் தேவையில்லை. அப்படி மரியாதையோடு ஜீவித்த யோபு, தான் எந்தளவு மரியாதையை இழந்து, தாழ்ந்து கிடந்தான் என்பதை அவன் வாயாலேயே சொல் வதைக் கேளுங்கள். "*இப்போதோ என்னிலும் இளவயதானவர்கள் என்னைப் பரியாசம் பண்ணுகிறார்கள், இவர்களுடைய பிதாக்களை நான் என் மந்தையைக் காக்கும் நாய்களோடே வைக்கவுங் கூட வெட்கப்பட்டிருப்பேன்*" என்று. (30:1) அப்பப்பா, யோபு சொல்வது கொஞ்சம் கூட என்பது போல தெரிந்தாலும், அவன் எவ்வளவு மரியாதையோடு வாழ்ந்திருக்கிறான் என்பதைத் தெரிந்து கொள்ள அது உதவுகிறது. ஆனால், இவைகளெல்லாம், கடந்த காலக் கதையாக அவன் வாழ்க்கையில் மாறிவிட்டது.

ஆனால், இந்த நிலையிலும், யோபு சொல்லியிருக்கிறான். என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன் என்று. என்னாலும், உங்களாலும் இப்படிச் சொல்ல முடியுமா? சொல்லுங்கள்! சொல்லுங்கள்!!

அன்பான வாசக நண்பரே! நம்முடைய உத்தமம் எந்தளவில் உள்ளது? உத்தமம் என்பது, பாவமே செய்யாத நிலை அல்ல. மாறாக, பாவத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும் ஓர் நிலை. யோபு தன் வாழ்க்கையின் ஒரு கட்டத்தில், தன்னை பாவத்திலிருந்து விடுவித்துக் கொண்டு, தன் ஆவி பிரியுமட்டும் தன்னை உத்தமனாகக் காத்துக் கொண்டுள்ளான் என்று தெரிகிறது. நம்மில் எத்தனை பேர் நம்மை வேத வசனங்களின் அடிப்படையில், நம்மைப் பாவத்திலிருந்து விடுவித்துக் கொண்டு யோபுவைப் போல உத்தமர்களாகக் காத்து வருகிறோம்.

யோபுவின் உத்தமத்தைப் படித்துவிட்டு ஆஹா என்று புகழ்வதால் நமக்கு எந்த நன்மையும் இல்லை. மாறாக, நானும் யோபுவைப் போல உத்தமனாக வாழ்வேன் என்று தீர்மானிக்க வேண்டும். தேவன் அதை நம்மிடம் எதிர்பார்க்கிறார்.

யோபுவைப் போல், ஓர் உத்தம வாழ்க்கை நாம் வாழ வேண்டுமானால், நம்மை பாவத்திலிருந்து விடுதலையாக்கிக் கொள்ள வேண்டும். அப்படிப் பாவத்திலிருந்து விடுதலையாக முதலாவது, விசுவாசிக்க வேண்டும் (எபி. *11:6*). அடுத்து, மனந்திரும்ப வேண்டும். *(2* கொரி *7:10)* பிறகு, இயேசு தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட வேண்டும். *(அப். 8:37)*. இறுதியாக, பாவமன்னிப்புக்கென்று தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும். *(அப்.22:16)*. இவைகளைச் செய்யும் போது, பாவத்திலிருந்து விடுபட்டு இரட்சிப்படைவோம். இரட்சிப்பின் நிலை தான், உத்தம நிலை. பெற்றுக்கொண்ட இரட்சிப்பில் நிலைத்திருக்கும் போது, உத்தம வாழ்க்கையை யோபு போல நடத்துகிறவர்களாயிருப்போம்.


இப்படிப்பட்ட உத்தம வாழ்க்கைக்கு, சத்திய வசனங்களின்படி ஒப்புக்கொடுக்க உங்களை வேண்டுகிறேன். ஆமென்! ☆

## சரி தானே!

***கடமை உணர்வு*** நாம் காரியங்களை நன்றாகச் செய்யத் தூண்டுகிறது.

ஆனால், ***அன்பு*** காரியங்களை ரசித்து அழகாகச் செய்யத் தூண்டுகிறது.

எனவே, அன்பே பிரதானம்.



# ஏன் நாங்கள் பரலோகத்தில் நம்பிக்கை வைக்கிறோம்?

**Bro. J.C. சோட்**

பரலோகம் பற்றி நான் பேசும் போது நான் வானம், மேகம் அல்லது உலகைச் சுற்றியுள்ள வளிமண்டலம் பற்றிப் பேசவில்லை. சில நேரங் களில் நாம் இவைகளைப் பரலோகம் என்று கூட குறிப்பிடுகிறோம். ஆனால், நான் உங்களிடம் பேசும் பரலோகம் என்பது, தேவன் வாசம் செய்யக்கூடிய இடம். இது ஓர் அழகான இடம், நீதிமான்களின் வீடு, அங்கேதான் தேவ பக்தி யுள்ள ஆத்துமாக்கள் தங்கள் நித்தியத்தைக் கழிக்கும். தேவனுடைய வார்த்தைகளில் பரலோகம் என்பது புதிய எருசலேம் என்று கூட விவரிக்கப்பட்டிருக்கிறது.

வேத வசனங்கள் பரலோகம் பற்றிப் பொதுவாக பேசுகின்றன. நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்களைப் பார்த்து கிறிஸ்து இப்படிச் சொன்னார். " சந்தோஷப்பட்டு களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசி களையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே " (மத்தேயு 5:12). "*பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக* " (லூக்கா 11:2) என்று ஜெபிக்கும்படியாக இயேசு தம்முடைய சீடர்களுக்கு கற்றுக்கொடுத்தார். மேலும், இயேசு தம்முடைய சீடர்களிடத்தில், "*பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கி ஷங்களைச் சேர்த்து வையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்* " என போதித்தார் (மத்தேயு 6:20,21). அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவை தேவனுடையகுமாரன் என்று அறிக்கையிட்ட பிறகு, அவர் அவர்களை நோக்கி, " *பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டு கிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத் திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப் பட்டிருக்கும் என்றார்* " (மத்தேயு 16:19). இயேசு எழுபது பேரை கட்டளை கொடுத்து வெளியே அனுப்பும்போது, "*இதோ சர்ப்பங் களையும், தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமை யையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங் கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது. ஆகிலும், ஆவிகள்*

*உங்களுக்கு கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள் என்றார்"* (லூக்கா 10:19,20).

பரலோகத்திற்கு யாரெல்லாம் போவார்கள்? இயேசு தன்னுடைய நாட்களில் வாழ்ந்த மக்களைப் பார்த்து *" நீங்கள் மனந் திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்"* என்றார் (மத்தேயு *18:3*). பச்சிளங் குழந்தைகள், சிறு பிள்ளைகள் அல்லது கணக்கு ஒப்பவிக்க வேண்டிய வயதை அடையாதவர்கள் தங்கள் செயல்பாடுகளுக்கு பொறுப்பாளியாக மாட்டார்கள். எது சரி, எது தவறு என அவர்கள் அறியாதபடியால் அவர்கள் மரிக்கும்போது பரலோகம் போவார்கள். கர்த்தருடைய ராஜ்யம் அல்லது சபை பரலோகத்தில் சேர்க்கப்படும். *" அதன் பின்பு முடிவு உண்டாகும்; அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும், வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார்"* என்று பவுல் கூறியுள்ளார் (I கொரி. *15:24*). கிறிஸ்து சபை அல்லது சரீரத்திற்குத் தலையாயிருக்கிறார் என்று நாம் எபேசியர் 5:23-ல் வாசிக்கிறோம் (கொலோ. *1:18*; அப். *20:28*). கர்த்தர் அந்த சபையை கறை திரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும், பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக ஒப்புக்கொடுப்பார் என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டும் (எபே. *5:27*). மத். *13:40*-ல் எப்படி கர்த்தர் தம்முடைய தூதர்களை அனுப்பி ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும், அக்கிரமஞ்செய்கிறவர்களையும் கூட்டிச் சேர்ப்பார் என்றும் பின்பு அவர்கள் அழிக்கப்படும்படிக்கு அக்கினியிலே போடப்படுவார்கள் என்றும் வாசிக்கிறோம். ஆனால், சபை பரலோகத்திலிருக்கிற தேவனிடத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் என்பதின் பொருள், நித்திய காலத்திற்கும் நாம் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால் சபையிலே இருக்க வேண்டியது கட்டாயம் என்பதே. உண்மையுள்ளவர்கள் அல்லது கர்த்தருடைய பிரமாணத்தை கைக்கொள்ளுபவர்கள், பரலோகம் போவார்கள் என்று வேதவசனம் சொல்கிறது. கிறிஸ்துவானவர், *" நீ படப்போகிற பாடுகளைக்குறித்து எவ்வளவும் பயப்படாதே; இதோ, நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்து நாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரண பரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்"* என்று சொல்லியுள்ளார் (வெளி. *2:10*). யாக்கோபு, *"சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கின பின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்"* என்று (யாக்கோபு *1:12*) யோவான் இவ்விதமாக எழுதியுள்ளார். *" ஜீவ விருட்சத்தின் மேல்*

*அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்* " (வெளி. 22:14).

பரலோகத்தில் யார் இருக்கிறார்? அங்கே தேவன் இருக்கிறார். பரலோகம் ஜீவனுள்ள தேவனுடைய நகரமாக விவரிக்கப்பட்டிருக்கிறது (எபிரெயர் 12:22). இயேசு கிறிஸ்து அங்கே இருக்கிறார் (அப். 2:30, 33). தேவனுடைய தூதர்கள் அங்கே இருக்கிறார்கள் (II தெச. 1:7-9).

பரலோகம் எதைப்போன்று இருக்கும்? யோவான் பரலோகத்தைப் பற்றி இப்படி எழுதியிருக்கிறார். பின்பு, " *நான் புதிய வானத்தையும், புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும், முந்தின பூமியும் ஒழிந்து போயின; சமுத்திரமும் இல்லாமற் போயிற்று. யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தை தேவனிடத்தினின்று பரலோகத்தை விட்டு இறங்கி வரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது. மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ் சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன் தாமே அவர்களோடே கூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப் பார். அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது. சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்தவர்: இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார். பின்னும்,* " *அவர்; இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள், இவைகளை எழுது என்றார். அன்றியும், அவர் என்னை நோக்கி: ஆயிற்று, நான் அல்பாவும், ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன். தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத் தண்ணீருற்றில் இலவசமாய்க் கொடுப்பேன். ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான்* " (வெளி. 21:1-7).

தொடர்ந்து நாம் வாசிக்கும் போது, யோவான் இப்படியாக எழுதியுள்ளார். பின்பு, " *பளிங்கைப்போல் தெளிவான ஜீவத் தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வருகிறதை எனக்குக் காண்பித்தான். நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரெண்டுவிதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள். இனி ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக் குட்டியானவரும்*

*இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும். அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவித்து, அவருடைய சமூகத்தைத் தரிசிப்பார்கள்; அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும். அங்கே இராக்காலமிராது; விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை; தேவனாகிய கர்த்தரே அவர்கள் மேல் பிரகாசிப்பார். அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள். பின்பு, அவர் என்னை நோக்கி; இந்த வசனங்கள் உண்மையும் சத்தியமுமானவைகள். சீக்கிரமாய்ச் சம்பவிக்க வேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும் பொருட்டு, பரிசுத்த தீர்க்கதரிசிகளின் கர்த்தராகிய தேவனானவர் தம்முடைய தூதனை அனுப்பினார். இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கைக்கொள்ளுகிறவன் பாக்கியவான்*" என்றார் (வெளி. **22:1-7**).

பரலோகம் என்பது ஆயத்தமாக்கப்பட்ட மக்களுக்கான ஆயத்தமாக்கப்பட்ட இடம் என்று ஒருவர் சொல்லியுள்ளார். அது, தேவனும் அவருடைய மக்களும் என்றென்றுமாய் வாழும் ஓர் இடமாக இருக்கிறது. எனவே, மனிதன் இந்த வாழ்க்கையைப் பிரிந்து செல்லும் போது உண்மையாக மரிப்பதில்லை. சரீரப் பிரகாரமாக அவன் மரிப்பான். ஆனால், அவன் ஆத்துமா நித்திய நித்தியமாக வாழும். கர்த்தருக்கு கீழ்ப்படிந்து அவரிடத்தில் உண்மையாயிருப்பவர்கள், ஒரு நாளில் பரலோகத்திற்கு எடுத்துச் செல்லப்படுவார்கள். அங்கே அவர்கள் ஒரு போதும் மரிப்பதில்லை.

பரலோகம் பற்றி முழுமையாக புரிந்து கொள்வது என்று வரும் போது உண்மையாகவே, அது நம்முடைய புரிந்து கொள்ளுதலுக்கு அப்பாற்பட்டது. எனவே, நாம் அதை விசுவாசத் தினால் ஏற்றுக் கொண்டு, பரலோகம் நடைமுறை சாத்தியமாகும் வரைக்கும் அந்த வேலையை நோக்கிக் கடந்து சென்று கொண்டிருக்கிறோம். தேவன் நம்மை ஏமாற்றாமல், நம்முடைய கனவுக்கும், கற்பனைக்கும் மேலாகத் தந்தருளுவார் என்பதில் நமக்கு நம்பிக்கை இருக்கிறது.

நீங்கள் கிறிஸ்தவராக இல்லையென்றால் நீங்கள் இழந்து போன நிலையில் இருக்கிறீர்கள்; கல்லறைக்கு அப்பால் உங்களுக்கு எந்த நம்பிக்கையும் இல்லை. இதை நீங்கள் உணர்ந்து அதை சரி செய்யும்படி முயற்சிக்க நான் ஜெபிக்கிறேன். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவிலுள்ள உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு, இரட்சிக்கும்படி ஞானஸ்நானம் பெற்றால் நீங்கள் இரட்சிக்கப்பட்டு ஒரு நாள் பரலோகம் போவதற்கான நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ள முடியும் (மாற்கு **16:16**). இதை நீங்கள் செய்தால் கர்த்தர் உங்களை இரட்சிப்பது மாத்திரமல்ல, உங்களை தம்முடைய சபையிலும் சேர்த்துக்கொள்வார் (அப். **2:47**). உங்களுக்கு நேரமும், வாய்ப்பும் இன்னும் இருக்கிறபடியால் நீங்கள் அப்படிச் செய்யும்படி நாங்கள் ஜெபிக்கிறோம். ☆

பெண்கள் பகுதி

# ஆத்தும ஆதாயத்தில் பெண்கள்

Sis. RACHEAL NAYAGAM

சபையிலே செய்யப் பட்ட ஊழியம் சம்பந்தப்பட்ட காரியங்களில் பெண்கள் பங்கு பெற்றதற்கான முன் உதாரணங் களை நாம் வேத வசனங்களிலே தேட முற்பட்டால், பிலிப்பு பட்டணத்தில் இருந்த சபைக்கு, பவுல் எழுதின வசனம் நம் கண்ணுக்குப் புலப்படும். கர்த்தருக்குள் ஒரே சிந்தையா யிருக்க எயோதியாளுக்கும், சிந்திகேயாளுக்கும் புத்தி சொல்லுகிறேன். என் உத்தம கூட்டாளியே..... அவர்கள் கிலேமெந்தோடும், மற்ற என் உடன் வேலையாட்களோடு கூடச் சுவிசேஷ விஷயத்தில் என்னோடு கூட மிகவும் பிரயாசப்பட்டார்கள்.... (பிலி. 4:2,3) மற்றும் ரோமாபுரி யாருக்கு நிருபம் எழுதும்போது தன்னோடு கூடப் பாடுபட்ட அநேக பெண்களை பவுல் குறிப் பிடுகிறார். எங்களுக்காக மிகவும் பிரயாசப்பட்ட மரியாளை வாழ்த்துங்கள் (வசனம் 6) கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன் வேலையாட்களாகிய பிரிஸ் கில்லாளையும், ஆக்கில்லா வையும் வாழ்த்துங்கள். அவர்கள் என் பிராணனுக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள்..... அவர்கள் வீட்டிலே கூடி வருகிற சபையையும் வாழ்த்துங்கள் (வச. 3,5).

இந்த ஜோடியை நாம் முதல் முதலாக அப். 18:2,3 ஆகிய வசனங்களில் காணலாம். பவுல் தனது இரண்டாம் சுவிசேஷப் பயணத்தில் அத்தேனே பட்டணத்தை விட்டு கொரிந்து பட்டணத்திற்கு வந்த போது.... இத்தாலியாவிலிருந்து புதிதாய் வந்திருந்த பொந்து தேசத்தானாகிய ஆக்கில்லா என்னும் நாமமுள்ள ஒரு யூதனை யும் அவன் மனைவியாகிய பிரிஸ்கில்லாளையும் அங்கே கண்டு அவர்களிடத்திற்குப் போனான். அவர்கள் கூடாரம் பண்ணுகிற தொழிலாளிகளா யிருந்தார்கள். தானும் அந்தத் தொழில் செய்கிறவனானபடி யினாலே அப்போஸ்தலனாகிய பவுல் அவர்களோடே தங்கி வேலை செய்து கொண்டு வந்தான்.

ஆக்கில்லா, பிரிஸ்கில்லா தம்பதி ஏற்கனவே கிறிஸ்தவர் களாயிருந்தார்களென்றோ, பவுலோடு கொரிந்துவில் ஏற்பட்ட பழக்கத்தால் கிறிஸ்த வர்களாக மாற்றப்பட்டார்க ளென்றோ வசனம் நமக்கு சொல்லவில்லை. ஆனால், அவர்கள் ஆரம்ப கால சபையில்

ஒரு முக்கியப் பங்கை வகித்தினர் என்பது மட்டும் நமக்குத் தெளிவாகத் தெரிகிறது.

அப். 18:24ம் வசனம், எபேசு பட்டணத்திற்கு வந்த அப்பொல்லோ என்ற பெயருடைய ஒரு மனிதனை நமக்கு அறிமுகப்படுத்துகிறது அவன் சாதுரியவான் வேதாகமங்களில் வல்லவன்.... அவன் கர்த்தருடைய மார்க்கத்திலே உபதேசிக்கப்பட்டு யோவான் கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அறிந்தவனாயிருந்து ஆவியில் அனலுள்ளவனாய்க் கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம் பண்ணிக் கொண்டு வந்தான்.

ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாவும் எபேசுவிலே வாழ்ந்து கொண்டு வந்தார்கள். அப். 18:26 அப்பொல்லோ ஜெப ஆலயத்தில் தைரியமாய்ப் பேசத் தொடங்கினான் என்று சொல்கிறது. ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் அவன் பேசுகிறதைக் கேட்டு, அவனைச் சேர்த்துக் கொண்டு தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள். பொதுவான இடங்களில் ஆண்கள் தான் பேசவேண்டு மென்றிருந்தாலும், ஒரு கிறிஸ்தவப் பெண் தனிப்பட்ட முறையில் போதிக்கலாம். இருவரும் ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் இயேசுக் கிறிஸ்துவைப் பற்றிய தெளிவான உண்மையை அப்பொல்லோ தெரிந்து கொள்வதற்கு உதவி செய்தார்கள்.

கிறிஸ்தவப் பெண்கள் வேத வசனங்களைப் படித்து, மற்றவர்களுக்குப் போதிக்கும் திறமையை வளர்த்துக் கொள்வது, இன்றைய நாளின் முக்கிய தேவைகளில் ஒன்று. உலக ஜனத் தொகையை எடுத்துக் கொண்டால் அதில் பெண்ள், இளம் பிள்ளைகள், குழந்தைகள் ஆகியோர் தான் பெரும்பாலானவர்கள் வேத வசனங்களை சிறப்பாகப் படித்துத் தேறும் பெண்கள், தன்னுடைய தோழிகள், தன்னுடன் பழகும் அயலகத்தார், உறவினர் என அநேகருக்கு நற்செய்தியை அறிவிக்கும் பல வாய்ப்புகளைப் பெற்று கொள்ள முடியும் தன்னுடைய வீட்டிற்கு தனிமையாகவோ அல்லது குழுவாகவோ மற்றவர்களை அழைத்து, குறைந்தது வாரத்திற்கு ஒரு முறையாகிலும் அழைத்து, அவர்களோடு தேநீர் அருந்தி மகிழ்ந்து பிறகு தேவனுடைய வார்த்தையைப் படிக்கலாம்.

கணவனும், மனைவியுமாகச் சேர்ந்து நண்பர்கள் மற்றும் அறிமுகமானவர்களுடைய வீடுகளைச் சந்திக்கச் சென்று அவர்களோடு சேர்ந்து சத்தியத்தைக் கற்கலாம். ஒரு வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்று மாலை வேலைகளை இதற்காக ஒதுக்கலாம்.

ஒரு கிறிஸ்தவப் பெண் அக்கம்பக்கத்திலுள்ள சின்னஞ் சிறார்களை வாரம் ஒரு முறை தன் வீட்டிற்கு வேத வகுப்பிற்கு வரும்படி உற்சாகப்படுத்தவும் வாய்ப்புண்டு. அவர்களுக்குப் பாடல்கள், மனப்பாட வசனங்கள், வேதாகமத்திலுள்ள சம்பவங்களை குட்டிக் கதை களாகச் சொல்லிக் கொடுக்க முடியும். அவர்கள் எப்படி வளர்ந்து வரும் நாட்களில் அவர் களோடு சேர்ந்து பெற்றோர் களும், சுவிசேஷத்திற்குக் கீழ்ப் படிந்து சபையில் அங்கம் வகிக்க வாய்ப்பண்டு. விசுவாசத்தில் பலமாக உள்ள ஒரு பெண், தன்னுடைய அயலகத்தில், இப்படிப்பட்டதான ஊழியங் களின் மூலம் ஒரு பெரிய தாக்கத்தை உண்டு பண்ண முடியும்.

பொதுவான இடங்களில் தலைமையேற்று நடத்தும் பொறுப்பு ஆண்களுக்கு இருந் தாலும், மற்றவர்கள் பின்பற்றக் கூடிய கிறஸ்தவ ஒழுக்க வாழ்வு, பெண்கள் மத்தியில் தலைமை யேற்று அவர்களை வழிநடத்தும் கிறிஸ்தவப் பெண்கள் இல்லா விட்டால் சபைகள் உண்மை யான பலம் பொருந்தினதாக இருக்க முடியாது. மெய்க் கிறிஸ்தவ வாழ்வை ஏற்றுக் கொண்ட பெண்களாகிய நாம் ஒவ்வொருவரும் ஜெபித்து, அதற்கேற்ற வேலைகள் செய்து பெண்கள் மத்தியில் நமது தலைமைப் பண்பை வளர்த்துக் கொள்ள பாடுபட்டு, அதன் மூலம் ஆத்தும ஆதாயம் செய்வோம். ☆

## *இன்றே இயேசுவை நோக்கிப் பாருங்கள்*

**ஏனெனில்,**

**அவருடைய கண்களில், ஜீவ ஒளியிருக்கிறது...**

**அவருடைய குரலில், சத்திய வாக்கிருக்கிறது...**

**அவருடைய பாதத்தில், சமாதான வழிகள் இருக்கிறது...**

**அவருடைய கரங்களில், ராஜ்யத்தின் வேலையிருக் கிறது...**

**அவருடைய இருதயத்தில், பிதாவின் அன்பிருக்கிறது!**

வாலிபர் பகுதி

# தன்னிகரற்ற தானியேல்

**Bro. Benny Martin**

வருடத்தில் ஒரு முறை வரும் வசந்த காலம் போல் வாழ்க்கையில் ஒருமுறை வரும் வாலிபப் பருவத்திலிருக்கும் வாலிபர்களுக்கு வானவராம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நல் வாழ்த்துக்கள். உங்கள் யாவரையும் மாதந்தோறும் மறக்காமல் சந்திப்பது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது. பிரியமானவர் களே! வேதப் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கும் சில கதாப்பாத்திரங் களை நாம் பார்க்கும் போது நாம் அவர்களைப் பின்பற்றுவதற்கு தகுதியானவர்களாக இருப்பதை நாம் பார்க்க முடியும். அப்படி ஒரு கதாப்பாத்திரம் தான் தானியேல். பொதுவாக இவ்வுலகில் ஒரு துறையில் வெற்றி பெற வேண்டுமானால் அவர் சில காரியங்களை சமரசம் செய்து கொள்ள வேண்டியதாயிருக்கிறது. ஆனால், தானியேல் தன் வாலிபப் பிராயத்தில் கூட தேவனுடைய காரியங் களை உலகக் காரியங்களோடு சமரசம் செய்யாமலேயே வாழ்வில் புதிய உயரங்களைத் தொட்டார். இந்த தானியேல் அந்நிய தேசத்தில் அடிமையாக இருந்தபோதிலும் ராஜக்கட்டளையை விட தேவக் கட்டளையே மேலானது என்று எண்ணி அதற்கே கீழ்ப்படிந்தார். விளைவுகளைப் பற்றி கவலைப்படவில்லை. இன்று இவ்வுலகில் வாலிபர்கள் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்காக, அரசின் சலுகை களைப் பெறுவதற்காக உலகத்திற்கு ஒத்த வேஷம் போடுவதை நாம் பார்க்கிறோம். ஆனால், தானியேல் பாபிலோன் சாம்ராஜ்ஜியத்தி லிருந்தபோதிலும் தேவனுக்கு விரோதமான செயலில் ஈடுபட கட்டளை வந்தும் அது அவரை அணு அளவும் அசைக்கவில்லை. உயிருக்கு உலை வைக்கும் உத்தரவு ராஜாவிடமிருந்து பிறப்பிக்கப் பட்ட போதிலும் அதை துச்சமாக எண்ணி தேவனுக்காக நின்றார். தானியேல் பாபிலோன் தேசத்தில் உயர்ந்தப் பதவியை அடைவதற்கு அவரிடத்தில் இருந்த எந்த குணாதிசயங்கள் காரணமாக அமைந்தன என்று இப்போது நாம் பார்ப்போம்.

## I. தானியேல் தீர்மானமுடையவராக இருந்தார்

தானியேல் வாலிபப் பருவத்தில் நேபுகாத்நேச்சரால் பாபிலோனுக்குக் கொண்டு போகப்பட்டார். அந்த அந்நிய தேசத்திற்குப் போனவுடனேயே தன்னைத் தீட்டுப்படுத்தக்கூடிய ராஜாவின் போஜனத்தைப் புசிக்கவும், அவருடைய திராட்ச ரசத்தைக் குடிக்கும் சவாலை எதிர்கொள்ள வேண்டியதாயிருந்தது. ராஜ

போஜனத்தை ருசிபார்க்கும் வாய்ப்பை நழுவ விட்டு விட்டாரே, பிழைக்கத் தெரியாதவர் என்று சிலர் நினைக்கக்கூடும். ஆனால், ராஜபோஜனம் தன்னை தீட்டுப்படுத்தும் என்று தானியேல் மனதில் தீர்மானித்திருந்தபடியால் அதைப் புசிக்கவில்லை. தானியேல் ராஜாவின் போஜனத்தைப் புசிக்க வேண்டும் என்கிற கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் இருப்பதினால் ஏற்படும் விளைவுகளைப் பற்றி கவலைப்படாமல் தேவக் கட்டளைக்கு கீழ்ப்படியும்படி தீர்மானித்தார். இன்று வாலிபர்கள் தேவனுக்கா? உலகத்திற்கா? என்று முடிவெடுக்கும் விஷயத்தில் முடிவெடுக்கத் திணறுவதை நாம் பார்க்க முடியும். இங்கே தானியேல் தேவனுக்கு முதலிடம் கொடுத்தபடியால் தேவன் தானியேலுக்குப் பிரதானிகளின் தலைவனிடத்தில் தயவும் இரக்கமும் கிடைக்கும்படி செய்தார் (தானி. 1:9). நாம் உலகப் பிரகாரமான காரியங்களில் துரிதமாக தீர்மானிக்கிறோம். ஒரு கிறிஸ்தவன் எப்படிப்பட்ட தீர்மானத்தை எடுக்க வேண்டும்? நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மத்தேயு 6:33ல் இதை தெளிவுப் படுத்தி விட்டார். நாம் முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடும் போது அதாவது பின்விளைவுகளைப் பற்றி கவலைப்படாமல் தேவ சித்தத்தை நாம் நாடுகிறவர்களாக, அதை நிறைவேற்றுபவர்களாக இருக்கும்போது நம் சத்துருக்களும் நம்மோடு சமாதானமாகும்படி செய்வார் (நீதி. 16:7). பிரியமானவர்களே! தேவன் நம்மை இவ்வுலகில் வாழ அனுமதிக்கும் கடைசி நிமிடம் வரை தேவனுக்காக வாழ தீர்மானிப்போம்.

## II. தானியேல் கொள்கையுடையவராக இருந்தார்

தானியேல் தன்னுடைய உறுதிப்பாட்டில் எந்த சமரசமும் செய்து கொள்ளவில்லை. ஒரு வாலிபனாக ராஜாவின் போஜனத்தை புசிக்க மறுப்பதிலும் சரி, முதிர் வயதில் ராஜாவாகிய பெல்ஷாத்சாரின் வெகுமதிகளை வாங்க மறுப்பதிலும் சரி தன் கொள்கையில், தன் நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தார் (தானியேல் 1:8;5:13,17). பொதுவாகவே மக்கள் கொள்கையில் பிடிப்புள்ளவர்களை நம்பி தங்கள் பணிகளை ஒப்படைப்பார்கள் காரணம் அவர்கள் அப்பணியில் உறுதியாயிருந்து அதைச் செய்து முடிப்பது தான். தேவனும் தங்கள் கொள்கையிலும், வார்த்தையிலும் உறுதியாயிருந்து அவருக்காக நிற்கிறவர்களை மெச்சுகிறார் (சங். 15:1,5). பெரும்பாலான வாலிபர்கள் தேவ காரியங்களில் ஈடுபட ஆரம்பத்தில் ஆர்வமாக களமிறங்குகிறார்கள். ஆனால், உலகத்தின் ஐசுவரியம், புகழ் போன்றவைகள் அவர்களுடைய கண்ணை மறைத்து விடுகிறபடியால் தேவ காரியங்களில் ஆர்வம் குறைந்து, தேவனுக்காக நிற்க வேண்டுமென்று ஆரம்பத்திலிருந்த உறுதியும் குறைந்து விடுகிறது.

ஒருவர் தன்னுடைய சொந்த நாட்டில் சுதந்திரமாக இருக்க முடியும். ஆனால், அந்நிய நாட்டிற்குப் போகும் போது அங்குள்ள சட்டத் திட்டங்களுக்கு கீழ்ப்படிந்தே ஆக வேண்டும், இல்லையென்றால் தண்டனைக்கு தப்ப முடியாது. இங்கே தானியேல் அந்நிய தேசமாகிய பாபிலோனில் இருந்து கொண்டு ராஜக்கட்டளைக்கு கீழ்ப்படியாமல் தேவக்கட்டளைக்கு கீழ்ப்படிந்தது அவர் கொள்கையில் எவ்வளவு பிடிப்புடையவராக இருந்திருக்கிறார் என்பதைத்தான் காட்டுகிறது.

### III தானியேல் பரிசுத்தமுடையவராக இருந்தார்

தானியேல் தீர்மானமுடையவராக, கொள்கையுடையவராக வாழ்க்கையில் இருந்தார் என்று நாம் பார்த்தோம். ஆனால், எல்லாவற்றையும் விட தானியேல் பரிசுத்தமாக இருந்தார். அதன் காரணமாகவே தேவன் அவரை அந்த அளவுக்கு உயர்த்தினார். தானியேலின் பரிசுத்த வாழ்க்கையைப் பற்றி பார்க்கும் போது அவருடைய சத்துருக்கள் கூட அவரிடத்தில் குற்றம் கண்டுபிடிக்க முடியவில்லை (தானி. 6:1,4). பொதுவாக வாலிபர்கள் மத்தியில் ஒரு தவறான, அதேநேரத்தில் ஓர் அபாயகரமான எண்ணம் காணப்படுகிறது அதென்னவெனில், வாலிபப்பருவத்தில் பரிசுத்தம், பத்தியம் என்றெல்லாம் இருக்க வேண்டியத்தில்லை அதெல்லாம் ஆண்டு அனுபவித்தப் பிறகு பார்த்துக் கொள்ளலாம், அதன்பிறகு தேவனுக்கென்று ஒப்புக்கொடுத்துவிடலாம் என்று நினைக்கிறார்கள். ஆனால், வாலிப வயதில் நம் பரிசுத்தத்தைக் காத்துக்கொள்ள வேண்டுமென்று தேவனால் நாம் எதிர்பார்க்கப்படுகிறோம் (1 தீமோத். 4:12). அதுமாத்திரமல்ல, தானியேல் தனிப்பட்ட வாழ்க்கையில் தினமும் மூன்று முறை ஜெபிக்கிறவராகவும் இருந்திருக்கிறார் (தானி. 6:10). பிரியமான வாலிபர்களே! தேவன் தானியேலை உயர்த்தியதற்கு எவைகளெல்லாம் காரணமாக இருந்தன என்று மூன்று காரணங்களை நாம் இதுகாறும் பார்த்தோம். அவைகளை நம் வாழ்விலும் நடைமுறைப்படுத்தினால் தேவனிடமிருந்து அபரிதமான ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக்கொள்வோம். தேவன் தாமே உங்கள் யாவரையும் ஆசீர்வதிப்பாராக! ஆமென். ☆

## சபையில் நீங்கள் எப்படிப்பட்டவர்?

☆ சபைக்காக கொடுக்கிறவரா அல்லது வாங்குகிறவரா?

☆ சபைக்கு இலகுவானவரா அல்லது பாரமானவரா?

☆ சபையைத் தாங்குகிறவரா அல்லது தாக்குகிறவரா?

☆ சபையில் சமாதானம் பண்ணுகிறவரா அல்லது சமாதானத்தைக் குலைப்பவரா?

சிறுவர் பகுதி

# எகிப்தின் பொக்கிஷங்களை வெறுத்தவன்

Dr. ABEL R. NAYAGAM

எனக்குப் பிரியமான சிறுதம்பி, தங்கைகளே, உங்கள் யாவருக்கும் எனது வாழ்த்துக் களை தெரிவித்துக் கொள்கிறேன். தேவன் நமக்குத் தந்த இந்த வருடம் முழுவதும் அவரே பாதுகாப்பாய் இருந்து சிறு பிள்ளைகளாகிய நம்மை வழி நடத்துவாராக. இப்பொழுது, நாம் நமது பாடங்களுக்கு கடந்து செல்வோம். இம்மாதம் தேவன் நமக்கு கொடுக்கும் அறிவுரை யைச் கேட்கலாமா? வாருங்கள் என்னோடு.

இம்மாதம் நாம் பிரமாணங் களின் தந்தையாகிய மோசேயிட மிருந்து சில பாடங்களை கற்றுக் கொள்வோம். மோசே வளர்ந்து பெரியவனான போது, அவன் கிறிஸ்து உலகத்திற்குள்ளாக கொண்டு வர தனக்கும் ஒரு பங்கு இருப்பதை அறிந்து வைத்திருந் தான். அதைப் பற்றி வேதாகமம் என்ன கூறுகிறது தெரியுமா? அவன் தேவனின் திட்டத்திற் குரிய தன் பங்குகளை எகிப்திலி ருந்த திரளான செல்வங்களை விட மேலாக எண்ணினான் (எபி. 11:26) என்று.

இச்செயல் மோசேயின் மிக உயர்வான தியாகமாகவும், அவன் விசுவாசத்தைக் காட்டுகிறதாக வும் இருக்கிறதல்லவா! ஏனென்றால் பொதுவாக எகிப்தியர்கள் அனைவரும் அந்நாளில் செல்வந் தர்களாகவே இருந்தனர். சில ஆண்டுகளுக்கு முன்பு புகழ் பெற்ற புதை பொருள் ஆராய்ச்சி யாளரான ஹவார்ட் கார்டர் எகிப்தின் வளம் எவ்வளவு சிறப் பானதென்பதை குடான்கமேன் என்ற அரசனின் கல்லறையின் மூலம் வெளிப்படுத்தியிருக்கிறார். இவன் பிரபலமாவதற்கு முன்பாக வே மரித்துப்போன ஒரு இளம் ராஜா தனது 18ம் வயதிலேயே இறந்து போனான். அவர் தனது, ஆராய்ச்சியின் முடிவாக 5,000க்கும் மேற்பட்ட புதையல் களை அவன் கல்லறையில் கண்டறிந்தார். அவை பெரும் பாலும் தங்க கட்டிகளாகவே காணப்பட்டனவாம். என்ன, நம்ப முடியவில்லை தானே? ஒரு எகிப்திய முதுமொழி இப்படிக் கூறுகிறது. எகிப்தில் தங்கம் தூசு போன்று மிக எளிதாக எல்லா இடங்களிலேயும் இருக்கும் என்று. இந்த முதுமொழி இக் கண்டுபிடிப்புகளுக்கு மேலும் ஆதாரமாய் விளங்குகிறது. பொதுவாக, ராஜாக்களை அடக்கம் செய்யும் தங்கத்தாலான சராசரி சவப்பெட்டியின் மதிப்பு சுமார் ரூ. 1,17,50,000 இருக்குமாம். (ஒரு கோடியே பதினேழு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபாய்) ஆகும்.

தேவனுடைய சித்தம் செய்யும்படிக்கு (எபிரெய அடிமைகளின் கஷ்டத்தில் சேர்ந்து) இத்தனை செல்வங்களையும் துறந்து தேவனுடைய ஜனங்களோடு பாடுகளை அனுபவிக்கத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட மோசேக்கு எப்படிப்பட்ட விசுவாசம் இருந்திருக்கும் என எண்ணிப் பாருங்கள். ஆனால், பொன்னைக் காட்டிலும், அதிக விலையேறப்பெற்றவைகள் தன்னுடைய விசுவாசத்திற்கு இருப்பதாக மோசே உணர்ந்திருந்தான். ஆகவே தான், அவன் எகிப்தின் செல்வங்களை துச்சமாக மதித்து, அரண்மனை வாழ்வுக்கு டாட்டா காட்டினான். தேவனை நாம் சேவிப்பது பூமியின் வாழ்க்கையில் மிக முக்கியமான ஒன்றாகும். ஆகையால், நாம் இச்சிறு பிராயத்தில் பின்பற்ற அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக! ☆

மனன வசனம் : எபி. 11:25

## நாளும், நடப்பும்

1. கூர்காலாந்து தனி மாநிலம் கோரி மேற்கு வங்கத்தில் காலவரையற்றப் போராட்டம்
2. உணவுப் பாதுகாப்புச் சட்டம் எல்லோருக்கும் பயனளிக்கக் கூடியத் திட்டம் - ஜி.கே. வசன்.
3. பருவ மழை காரணமாக மேட்டூர் அணை நிரம்பியதால் தமிழக விவசாயிகள் மகிழ்ச்சி.
4. இந்திய வீரர்கள் 5 பேர் சுட்டுக் கொல்லப்பட்டதனால் பாகிஸ்தானுக்கு இந்தியா கடும் எச்சரிக்கை.
5. மகளிருக்கான பிரத்தியேக வங்கிக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்.
6. கூடங்குளம் அணு உலை மூலமாக தமிழகத்திற்கு கூடுதலான மின்சாரம் அளிக்கப்படும் - மத்திய அரசு
7. ஜிம்பாப்வேக்கு எதிரான ஒரு நாள் போட்டிகளில் இந்தியா கோப்பையைக் கைபற்றியது.

# தேவனுடைய நண்பன்

**Bro. K. பாஸ்கர்**

" உறவுகளில் உன்னதமான உறவு நண்பன் என்ற உறவு. ஒரு தாயிடம் சொல்ல முடியாத விஷயத்தை, ஒரு தகப்பனிடம் பகிர்ந்து கொள்ள முடியாத விஷயத்தை, ஒரு மனைவியிடம் ஆலோசனை செய்ய முடியாத விஷயத்தை ஒரு நண்பனிடம் மனம் விட்டு சொல்ல முடியும். நண்பன் என்ற உறவு ஒரு தாய், தகப்பன் என்ற உறவைக் காட்டிலும் மேலானது. தன் மனைவியின் உறவைக் காட்டிலும் உயர்வானது. ஆகவே தான் ஒருவரைப் பற்றி நல்லவனா, கெட்டவனா என்று அறிந்து கொள்ள அவனுடைய நண்பனிடம் கேட்க வேண்டும் என்று அநேகர் சொல்லுவதுண்டு. அந்தளவு நண்பன் என்ற உறவு உண்மையானது. நாம் ஆவிக்குரியவர்களாக இருக்கிறபடியால் ஆவிக்குரிய நண்பர்களைக் குறித்துப் படிப்போம்.

## I *விசுவாசத்தின் மூலம் நண்பன்*

நம்முடைய தகப்பனாகிய ஆபிரகாம் எழுபத்தைந்து வயதாகும் போது தேவனுடைய அழைப்பைப் பெற்றார். நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்திற்குப் போ நான் உன்னை பெரிய ஜாதியாக்கி உன்னை ஆசீர்வதித்து உன் பேரைப் பெருமைப்படுத்துவேன். நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன் உன்னைச் சபிக்கிறவர்களைச் சபிப்பேன். பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார். கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னபடியே அவன் புறப்பட்டுப் போனான். தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப் போனான். இது வல்லவா விசுவாசம். (ஆதி. 12:1-4, எபி. 11:8) நாமாக இருந்தால் எங்கே? ஏன்? எதற்கு? என்றெல்லாம் கேட்டிருப்போம்! ஆனால் ஆபிரகாமோ எந்தக் கேள்வியும் தேவனிடம் கேட்காமல் தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் போனார். விசுவாசமானது கையிலே காசு, வாயிலே தோசை என்பதல்ல! அது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது (எபி. 11:1)

விசுவாசம் என்பது நம்முடைய வாழ்க்கையில் அடிப்படை விஷயமாக இருக்க வேண்டும். பணம், பதவி, பொன், பொருள் போன்றவையல்லவா அடிப்படை விஷயமாக இருக்கின்றது. ஆதலால் தான் எல்லா காரியத்திலும் ஒரு எதிர்ப்பார்ப்பும், ஆதாயமும் தேடுகின்றோம். ஆனால், விசுவாசத்தின் தகப்பன் ஆபிரகாமுக்கோ எந்த எதிர்பார்ப்பும், ஆதாயமும் இருந்த தில்லை, தேவன் சொன்னார் அவர் கீழ்ப்படிந்தார் அவ்வளவுதான். ஆபிரகாமின் விசுவாசத்தைக் குறித்து யாக்கோபு எழுதும் போது நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கைப் பலிபீடத்தின் மேல் செலுத்தின போது கிரியைகளினாலே அல்லவோ நீதிமானாக்கப் பட்டான்! விசுவாசம் அவனுடைய கிரியைகளோடே கூட முயற்சி செய்து, கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான். அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்கிற வேதவாக்கியம் நிறைவேறிற்று. அவன் தேவனுடைய சிநேகிதனெனப்பட்டான் (யாக். 2:21-23)

அன்பானவர்களே, ஆபிரகாமின் விசுவாசம் எழுபத்தைந்து வயதில் தொடங்கி அவர் நூற்று எழுபத்தைந்து வருடம் வரை அதாவது அவர் மரணமடையும் வரை விசுவாசத்தில் பெலவீனமாக இருக்கவில்லை. ஆதலால் தேவனுடைய நண்பன் என்னப்பட்டார். ஆனால் நாம் வயது செல்ல செல்ல நமது உறவினர்களைத் தேடுகின்றோம். தேவனைத் தேடுவதில்லை. இந்த ஆண்டில் நாம் நமது உறவினர்களைக் காட்டிலும், நமது பிள்ளைகளைக் காட்டிலும், நமது மனைவியைக் காட்டிலும் தேவனை முதன்மையாக வைத்து அவரையே தேடுவோம். அப்பொழுது நமது விசுவாசத்தின் மூலமாக நாமும் அவருக்கு நண்பனாக இருக்க முடியும்.

## II தேவனுக்குப் பயப்படுதலின் மூலமாக அவருக்கு நண்பன்

நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷரைப் பார்த்து என் சிநேகிதராகிய உங்களுக்கு நான் சொல்லுகிறேன், " சரீரத்தை கொலை செய்து பின்பு அதிகமாக ஒன்றும் செய்யத் திராணியில்லாதவர் களுக்குப் பயப்படாதிருங்கள் ". அதாவது மனிதர்களுக்குப் பயப்படா திருங்கள் என்கிறார். நீங்கள் இன்னாருக்குப் பயப்பட வேண்டுமென்று உங்களுக்குக் காண்பிக்கிறேன். கொலை செய்த பின்பு நரகத்திலே தள்ள வல்லமையுள்ளவருக்குப் பயப்படுங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அதாவது தேவனுக்கே பயப்படுங்கள் என்று கூறுகின்றார் (லூக். *12:4,5)*.

ஆனால், நம்முடைய நடைமுறை வாழ்க்கையிலே மனிதர்களுக்கும், மனித பாரம்பரியங்களுக்கும், சூனியத்துக்கும், மந்திர, தந்திரங்களுக்கும், ஜோசியங்களுக்கும் பயந்து வாழ்கிறோம். மேலோட்டமாக கிறிஸ்தவர் களாக வாழ்ந்து வருகின்றோம். நாம் இப்படி வாழ்ந்து வருவதினால் ஒரு பிரயோஜனமுமில்லை. ஏனென்றால் மனிதனுடைய மந்திரதந்திரங்க ளுக்கும், மனிதனுடைய பாரம்பரியங்களுக்கும் பயப்படுகிறவர்கள் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடை வார்கள் (வெளி. *21:8*) என்று வேத வசனம் கூறுகின்றது. எனவே, நாம் மனித னுடைய விக்கிரகங்களுக்கும், அதைச் சார்ந்த ஜோசியம், பில்லி, சூன்யம் போன்றவைகளுக்கும் பயப்படாமல் தேவன் ஒருவருக்கே பயப்படுகிறவர் களாக இருப்போம். *(எரே. 10:1-6)*

இஸ்ரவேல் புத்திரர் தேவனுக்குப் பயப்படுவது போல 'பாசாங்கு' செய்து கொண்டிருப்பதை தேவன் பார்த்து நீ யாருக்கு அஞ்சிப் பயப்படுகிறாய். நீ பொய் சொல்லுகிறாயே நீ என்னை நினையாமலும் உன் மனதிலே வைக்காமலும் போகிறாய். நான் வெகுகாலம் மவுனமாயிருந் தேன் அல்லவா. ஆகையால் எனக்குப் பயப்படாதிருக்கிறாய் என்று சொல்லு கிறார் (ஏசா. *57:11)*. ஆம் அருமையானவர்களே, இஸ்ரவேல் புத்திரரின் மனதிலே விக்கிரக ஆராதனைக்காரரின் பில்லிசூன்யம், மந்திரத் தந்திரங்கள் எல்லாம் இருந்தன. ஆனால், மேலோட்டமாக தேவன், கர்த்தர், ஆண்டவர் என்று வாழ்ந்தார்கள் அவர்களுடைய மாய்மாலத்தை தேவன் அறிந்திருந் தார். நாம் எப்படி? பெயரளவில் கிறிஸ்தவர்கள், மனதிலே பில்லிசூன்யக் கட்டுகளுக்கு பயந்து கொண்டிருக்கிறோமா? அப்படி இருந்தால் நாம் தேவனுடைய சிநேகிதர்களாக இருக்கமுடியாது. எனவே, நாம் தேவனுக்கு மட்டும் பயப்படுவோம் தேவனுடைய நண்பனாக இருப்போம்.

## III. தேவனிடத்தில் பேசுவதின் மூலமாக அவருக்கு நண்பன்

தேவன் வேதவசனத்தின் மூலமாக மனுக்குலத்தாரிடம் பேசி முடித்துவிட்டார். பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு முற்றிற்று. இன்று தேவன் வேத வசனத்தையல்லாமல் வேறு ஏற்பாட்டில் பேசுவதில்லை! வேதாகமம் இல்லாமல் வேறு ஆகமத்தில் பேசுவதில்லை! ஆகவே நாம் எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணாமல் இருப்போம் (1 கொரி. 4:6)

தேவனுடைய மனிதனாகிய மோசே, இஸ்ரவேலருக்காக தேவனிடத்தில் அடிக்கடி பேசினார். அது தேவனுக்கு பிடித்திருந்தபடியால் தேவன் "ஒருவன் தன் சிநேகிதனோடே பேசுவது போல கர்த்தர் மோசேயோடே முகமுகமாய் பேசினார்" (யாத். 33:11)

இன்று நாம் தேவனிடத்தில் ஜெபத்தின் மூலமாகப் பேசமுடியும். "நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல் எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும் " என்று வேத வசனம் கூறுகிறது (பிலி. 4:6,7)

நாம் தேவனிடத்தில் நம்முடைய தேவைகளை மட்டும் சொல்லுவது மட்டுமல்ல. நாம் அமைதலுள்ள வாழ்க்கையை வாழுவதற்கும் ஜெபம் செய்ய வேண்டும். (1 தீமோ. 2:1,2) நாம் இடைவிடாமல் ஜெபம் செய்கிறவர்களாக இருக்க வேண்டும். (I தெச. 5:17) நாம் சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபத்தின் மூலமாக தேவனிடத்தில் பேச வேண்டும் (லூக். 18:1,2) அவர் தான் நமக்கு ஆவிக்குரிய தகப்பன். அப்பா பிதாவே என்று கூப்பிடும்படியாக சுதந்திரம் பெற்று இருக்கிறோம் (ரோமர் 8:15) எனவே, நாம் தேவனிடத்தில் அடிக்கடி பேசி தேவனுடைய நண்பனாக இருப்போம்.

## IV தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுவதின் மூலம் நண்பன்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறுகின்றார் " நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால் என் சிநேகிதராயிருப்பீர்கள்" என்றார். (யோ. 15:14) இயேசு கூறும் அவருடைய கட்டளைகளை எல்லாம் நாம் கைக்கொள்ளும் போது அவருக்கு நாம் உற்ற நண்பராக இருக்க முடியும். அவருடைய கட்டளைகளில் பிரதானமான கட்டளை சுவிசேஷக் கட்டளை. அதற்குக் கீழ்ப்படியும் போது அவருக்கு நண்பராக இருக்க முடியும்.

எனவே, சுவிசேஷத்தை விசுவாசித்து (மாற். 16:16) பழைய பாவங்களிலிருந்து மனந்திரும்பி (அப். 2:38) இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு (அப். 8:37) பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும் (அப். 2:38) மரணபரியந்தம் வரை அவருக்கு உண்மையாக இருந்து (வெளி. 2:10) அவரை ஆராதிக்க வேண்டும். (யோ. 4:24) இப்படி அவருடைய கட்டளைகள் யாவையும் நாம் கைக்கொள்ளும் போது, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் இயேசு கிறிஸ்து நம்மோடு கூடவே இருக்கின்றார். (மத். 28:20). நண்பராக இருக்கின்றார் (யோ. 15:14). எனவே நாம் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவோம். அவருக்கு நண்பனாக இருப்போமாக! ஆமென். ☆

# மனுஷர் மேல் விழுந்த கடமை

**Bro. ஹென்றி மோகன்**

ஒவ்வொரு மனுஷருக்கும் சிறுவர்கள் முதற்கொண்டு பெரியோர்கள் வரை அவர்கள் வாழ்க்கையில் நிறைவேற்ற வேண்டிய அநேக கடமைகள் உண்டு. பிள்ளைகள் பள்ளிக்கு செல்வதையும், பாடங்களை படிப்பதும், அவர்களுக்கு கொடுக்கப்படும் வேலைகளை செய்வதையும் தங்கள் கடமையாக கொண்டுள்ளனர். பெற்றோர்கள் சம்பாதிப்பதும், குடும்பத்தை கவனிப்பதும், பிள்ளைகள் வளர்ப்பதும், பிள்ளைகளின் எதிர்காலத்தை குறித்து அக்கறை கொண்டவர்களாக சொத்துக்களை சேர்ப்பதும் பணத்தை சேமித்து வைப்பதும் பிள்ளை களுக்கு திருமணம் செய்து வைப்பதையும், பேரப் பிள்ளைகளை வளர்ப்பதையும் தங்களின் வாழ்க்கையின் கடமைகளாக கொண்டுள்ளனர். இவைகளை குறித்த கவலையே மனுஷனை ஆட்கொள்வதால், மனுஷன் தேவனால் அவருடைய மகிமைக் கென்று அவருடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்டவன் என்பதையும் சகலமும் அவருடையது. மனுஷனுடைய நடைகள் யாவையும் அவரே வாய்க்கப்பண்ணுகிறார். மனுஷனுடைய வாழ்க்கையில் தேவன் செய்வது எதுவோ அதுவே என்றென்றைக்கும் நிலைக்கும் என்னும் சத்தியத்தை அறியாதவனாகவும் தேவ சித்தத்தின்படியே அல்லாமல் சுயசித்தத்தின்படி வாழ மறக்காதவனாகவும் காணப்படு கிறான்.

எனவே மனுஷனுடைய இந்நிலையை குறித்து சாலொமோன் எனும் ஞானி ஆராய்ந்து எழுதியுள்ள பிரசங்கி என்னும் புத்தகம் வேதாகமத்தில் இடம் பெற்றுள்ளதை உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

மனுஷனுடைய நிலையை குறித்து இந்த புத்தகத்தில் எழுதப் பட்டுள்ள விஷயங்களை அறிந்து கொள்ளும் முன் இந்த புத்தகத்தை எழுதின ஆசிரியரை பற்றி அறிந்து கொள்வது மிகவும் பிரயோஜன மாக இருக்கும் என்று நம்புகிறேன். இந்த புத்தகத்தை எழுதினவர் சாலொமோன் என்பவர். இவர் தாவீதின் குமாரனும் எருசலேமில் இஸ்ரவேலருக்கு ராஜாவுமாயிருந்தவன் இவன் தேவனுடைய ஜனங்களை ஆளும்படி தோன்றின மூன்றாவது ராஜா, ஒரு நாள் இராத்திரியில் கர்த்தர் சாலொமோனுக்கு சொப்பனத்தில் தரிசனமாகி நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள் என்று தேவன் சொன்னார். சாலொமோன் சிறுபிள்ளையாய் இருக்கும்போதே தேவனுடைய ஜனங்களாகிய இஸ்ரவேலருக்கு ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்ட வனானபடியால் தேவனுடைய ஜனங்களை நியாயம் விசாரிக்கவும், நன்மை தீமை இன்னதென்று வகையறுக்கவும் ஞானமுள்ள இருதயத்தை

தந்தருளும் என்றான். சாலொமோன் இந்த காரியத்தை கேட்டது ஆண்டவருடைய பார்வைக்கு உகந்த விண்ணப்பமாயிருந்தது. தேவன் அவனை நோக்கி நீ உனக்கு நீடித்த நாட்களைக் கேளாமலும் ஐசுவரியத்தைக் கேளாமலும் உன் சத்துருக்களின் பிராணனை கேளாமலும் நீ இந்த காரியத்தையே கேட்டு நியாயம் விசாரிக்கிறதற்கு ஏற்ற ஞானத்தை உனக்கு வேண்டிக் கொண்டபடியினால் உன் வார்த்தைகளின்படி செய்தேன்; ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தை உனக்குத் தந்தேன் இதிலே உனக்குச் சரியானவன் உனக்குமுன் இருந்ததுமில்லை உனக்கு சரியானவன் உனக்குப்பின் எழும்புவதுமில்லை என்றார்.

இவ்விதமாக தேவனால் சகல ஞானத்தையும் பெற்றுள்ள சாலொமோன் ஞானி வானத்தின் கீழ் நடப்பதையெல்லாம் ஞானமாய் விசாரித்து ஆராய்ச்சி செய்கிறதற்கு தன் மனதை பிரயோகம் பண்ணி சூரியனுக்கு கீழே மனுஷர்களால் செய்யப்படுகிற காரியங்க ளெல்லாம் கவனித்துப் பார்த்து எல்லாம் மாயையும் மனதுக்கு சஞ்சலமுமாயிருக்கிறது என்று எழுதுகிறார்.

மாயையும், மனதுக்கு சஞ்சலமான மனுஷனுடைய கடமைகள் சிலவற்றை இக்கட்டுரையின் வாயிலாக பார்க்கலாம்.

இக்காலங்களில் பெற்றோர்கள் பிள்ளைகளை படிக்க வைப்பதில் மிகவும் அக்கறையுடையவர்களாக காணப்படுகிறார்கள். குழந்தைகள் பேச ஆரம்பித்ததுமே 1,2,3,4 என்று கற்றுக் கொடுக்க ஆரம்பித்து விடுகின்றனர். காரணம் பிள்ளைகள் நன்றாக படித்து சமுதாயத்தில் ஓர் உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்பது அவர்களின் நோக்கமாய் இருக்கிறது. பிள்ளைகளும் அதே சிந்தையை உடையவர்களாய் வளர்ந்து வருகின்றனர். இச்செயல் மனுஷன் தான் தேவனுக்கு பயபக்தியாய் வாழ வேண்டும் என்பதின் அவசியத்தையே அறியாத நிலைக்கு கொண்டு சென்றுள்ளது. உலகத்தின் ஞானத்தை யும், அறிவையும் பெறாத ஒருவனுக்கு அறிவில்லாதவன் பைத்தியக் காரன் என்ற முத்திரை பதிக்கப்படுகிறது. ஆனால், சாலொமோன் ஞானி ஞானமானது என்ன என்றும் பைத்தியமும் மதியீனமும் என்ன என்றும் ஆராய்ந்து இவ்வாறு எழுதுகிறார். இருளைப்பார்க்கிலும் வெளிச்சம் எவ்வளவு உத்தமமென்று கண்டேன். ஞானியின் கண்கள் அவன் முகத்திலே இருக்கிறது; ஆகிலும் அவர்கள் எல்லாருக்கும் ஒரேவிதமாய்ச் சம்பவிக்கிறது. மூடன் எப்படி சாகிறானோ அப்படியே ஞானியும் சாகிறான். மூடனுக்குச் சம்பவிக்கிறதுபோல தேவனால் சகல ஞானத்தையும் பெற்ற சாலொமோன் ஞானிக்கும் சம்பவிக்கிறதே என்பதை அறிந்த அவன் அதிக ஞானமடைந்ததினால் காரியம் என்ன என்று சிந்தித்து இது மாயையும் மனதுக்கு சஞ்சலமுமாயிருக்கிறது என்று எழுதுகிறார். (பிர. 2:13,17). மனுஷன் தேவனுடைய மகிமைக் கென்றே உண்டாக்கப்பட்டிருப்பதால் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை முதலாவது தெய்வ பக்தி உள்ளவர்களாக வளர்ப்பதும்

பிள்ளைகளும் தெய்வ பயத்துடனும், பக்தியுடனும் வளர்வதுமே தங்கள் மேல் விழுந்த கடமை என்பதை சாலொமோன் நினைவூட்டு கிறார்.

ஒருவன் அதிகமாய் பிரயாசப்பட்டு சம்பாதித்த ஆஸ்திகளை அவனுக்கு பின் வரப்போகிறவனுக்கு அதை வைத்து போகிறான். அவனுக்கு பின் வரப்போகிறவன் புத்திமானாயிருப்பானோ மூடனா யிருப்பானோ அதை யார் அறிவார்? எனவே மனுஷன் இவ்வாழ்க்கை யில் பிரயாசப்பட்டு ஞானமாய் சம்பாதித்த சகல வஸ்துக்களின் பேரிலும் வேறொருவன் அதிகாரியாகிறான். இதைத் தான் மனுஷன் தன் வாழ்க்கையில் கடமையாக கொண்டுள்ளான். இதனால் மனுஷ னுடைய ஆத்துமாவிற்கு எந்த ஒரு நன்மையும் இல்லை. எனவே இதுவும் மாயையே ஒருவன் புத்தியுடனும் திறமையுடனும் நிதானத் தோடும் பிரயாசப்பட்டு அநேக செல்வத்தை சேர்த்து வைக்கிறான். ஆகிலும் அப்படிப் பிரயாசப்படாதிருந்த வேறொருவனுக்கு அதை சொந்தமாக விட்டுவிட வேண்டியதாகும். இதைத் தான் மனுஷன் தன் கடமையாகக் கொண்டுள்ளான். இதுவும் மாயையும் மனதுக்கு சஞ்சலமுமாக உள்ளது. இவ்விதமான செயல்களினால் அவனுக்கு பலன் என்ன? இந்த மாயையான செல்வத்தை சம்பாதிக்க வேண்டும் என்பதே அவனுடைய இருதயத்தின் சிந்தனையாய் இருக்கிறது. அவன் நாட்களெல்லாம் அலுப்புள்ளதும் அவன் வேலைகள் வருத்த முள்ளதும் இராத்திரியிலும் அவன் மனதுக்கு இளைப்பாறுதல் இருப்பதில்லை. இதுதான் அவன் பிரயாசத்தின் பலன். இச்செயல் களால் அவனுடைய ஆத்துமாவிற்கு பலன் எதுவுமில்லை என்று அறிந்து கொள்ளும்போது இதுவும் மாயையும் மனதுக்கு சஞ்சலமு மாயிருக்கிறது. ஆனாலும் மனுஷன் இதைத்தான் கடமையாக எண்ணுகிறான்.

மனுஷன் மாயையான இவ்வுலக வாழ்க்கையில் வசதியாக வாழ எண்ணி அதிகமாக பிரயாசப்படுகிறான். அப்படி அவன் பிரயாசப் பட்டு சம்பாதித்தவைகள் எல்லாம் அயலானுடைய பொறாமைக்கு ஏதுவாயிருக்கிறது என்று காணும்போது இதுவும் மாயையும் மனதுக்கு சஞ்சலமுமாயிருக்கிறது. ஆனால், மனுஷனோ இதைத்தான் தன் கடமையாக எண்ணுகிறான்.

ஒருவன் ஒண்டிக்காரனாயிருக்கிறான் அவனுக்கு உடனாளியு மில்லை. அவனுக்கு பிள்ளைகளும் சகோதரர்களும் இல்லை அப்படியிருந்தும் அவன் படும் பிரயாசத்திற்கு முடிவே இல்லை; அவன் கண் ஐசுவரியத்தால் திருப்தியாகிறதுமில்லை; அவன் ஒரு நன்மையும் அனுபவியாமல் யாருக்காக பிரயாசப்படுகிறேன் என்று அவன் சிந்திக்கிறதுமில்லை. இதுவும் மாயை தீராத தொல்லையு மாயிருக்கிறது என்று சாலொமொன் எழுதுகிறான். மேலும் பணப் பிரியன் பணத்தினால் திருப்தியடைவதில்லை; செல்வப் பிரியன்

செல்வப் பெருக்கினால் திருப்தியடைவதில்லை. பொருள் பெருகினால் அதைத் தின்கிறவர்களும் பெருகுகிறார்கள். அதை உடையவர்கள் தங்கள் கண்களினால் அதை காண்பதேயன்றி அவர் களுக்கு பிரயோஜனமில்லை. செல்வப் பெருக்கோ அவனை தூங்க விடுவதில்லை அதுமட்டுமல்ல ஐசுவரியமானது அதை உடையவர் களுக்கே கேடுண்டாகும்படி சேர்த்து வைக்கப்படுவதாக இருக்கிறது. இதை சாலொமோன் கண்ட கொடிய தீங்காக கருதுகிறார். ஆனால், மனுஷனோ இவைகளைத்தான் தனது கடமையாக எண்ணுகிறான்.

மாயையும் மனதுக்கு சஞ்சலமுமான இந்த வாழ்க்கை மனுஷன் தன் நாட்களிளெல்லாம் இருளிலே புசித்து, மிகவும் சலித்து நோயும் துன்பமும் அடைகிறான். ஒருவன் நூறு பிள்ளைகளைப் பெற்று அநேகம் வருஷம் ஜீவித்து தீர்க்காயுசை அடைந்திருந்தாலும் அவன் ஆத்துமா அந்தச் செல்வத்தால் திருப்தியடையாமலும் அவனுக்கு பிரேதக் கல்லறை முதலாய் இல்லாமலும் போகுமானால் அவனைப் பார்க்கிலும் கருவழிந்த பிண்டம் வாசி என்று ஞானி எழுதுகிறார். மனுஷன் தன் தாயின் கர்ப்பத்திலிருந்து நிர்வாணியாய் வருகிறான் வந்தது போலவே நிர்வாணியாய் திரும்பப் போகிறான். அவன் தன் பிரயாசத்தினால் உண்டான பலனொன்றையும் தன் கையிலே எடுத்துக் கொண்டு போவதில்லை. இந்த உலக வாழ்க்கையில் அவன் படும் பிரயாசங்கள் அவனுடைய மறுமைக்கு எவ்விதத்திலும் பயனற்றதாக இருக்கிறது.

இவ்விதமான மாயையான காரியங்களை செய்வதில் மனுஷன் தன் வாலிப நாட்களில் அவனுடைய நெஞ்சின் வழிகளிலும் கண்ணின் காட்சியிலும் நடந்து பூரிப்படைகிறவனாய் இருக்கிறான் வாலிப நாட்களில் தேவனை நினைப்பது அரிதான காரியமாக காணப் படுகிறது. மனுஷனுடைய இளம் வயதும் வாலிபமும் மாயையே. மனுஷனுடைய சரீரத்தின் அவையவங்கள் பலவீன மடைந்து பயனற்றதாக மாறும் தீங்கு நெருங்கிக் கொண்டு வருகிறது. மனுஷன் தன்னுடைய வாழ்க்கையை ஒரு கணம் சிந்தித்து பார்த்தால் எல்லாம் மாயையும் மனதுக்கு சஞ்சலமுமாயிருக்கிறது புரியும்.

இந்த அநித்தியமான உலக வாழ்க்கையின் மேன்மைக்காக மனுஷன் தன்னுடைய வாழ்க்கை முழுவதையும் அற்பணித்தவனாக நாட்களை வீணாக்கி வாழ்ந்து வருவதை அறியாமலிருப்பது மிகவும் வேதனைக்குரியதாக காணப்படுகிறது. மனுஷன் உலகம் முழுவதை யும் தனக்கு சொந்தமாக்கி கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப் படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? என்று இயேசு கூறுகிறார்.

எனவே அநித்தியமான உலக வாழ்க்கையில் மனிதன் தன்னு டைய கடமைகளாக கருதி செய்துவரும் காரியங்களை காட்டிலும், மனுஷன் தேவனுடைய மகிமைக்கென்றே சிருஷ்டிக்கப்பட்டவன் என்பதை அறிந்து உணர்ந்து தன்னை உண்டாக்கின சர்வ வல்லமை யுள்ள தேவனுக்கு பயந்து அவர் கற்பனைகளை கைக்கொண்டு வாழ வேண்டும். இதுவே எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை. (பிர. *12:13*).

தேவ கிருபை உங்களோடிருப்பதாக!. ☆

வசன ரீதியான கிறிஸ்துவின் சபை

# பாடம்-33. அறு நூற்றருபத்தாறு

**Bro. K. பாஸ்கர்**

வாசகர்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் நாமத்தினாலே வாழ்த்துக்கள் பல!

இந்த அறுநூற்றருபத்தாறு என்ற இலக்கம் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் மட்டும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது (வெளி. 13:18) இது பற்றிய மனிதனுடைய கற்பனைகள் நிறைய உள்ளது. இது பற்றிய தெளிவான சத்தியத்தை நாம் அறிந்து கொண்டு வசன ரீதியான கிறிஸ்துவின் சபையை அறிந்துகொள்வோமாக.

## I அறுநூற்றருபத்தாறு என்ற எண் எதை அர்த்தப்படுத்தவில்லை

இப்போது நமது நாட்டில் மக்கள் தொகைக் கணக்கெடுப்புக்காக ஆதார் என்னும் அடையாள அட்டை கொடுப்பதற்காகப் புகைப் படம் எடுக்கும் பணி நடந்து கொண்டிருக்கிறது. ஆனால், சில கிறிஸ்தவர்கள் இந்த ஆதார் அடையாள எண் அறுநூற்றருபத்தாறைக் குறிக்கிறது என்று சொல்லுகின்றனர். ஆனால் வேத வசனம் இதனை அர்த்தப்படுத்தவில்லை. மக்கள் தொகைக் கணக்கெடுப்பு தேவனுக்கு விரோதமான செயல் அல்ல! தேவன் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்து கானான் தேசத்திற்கு வழிநடத்தினார். அவர்களை தேவன் வனாந்திர வழியாக நடத்தும் போது மோசேயிடம் ஜனங்களைக் கணக்கெடுக்கும்படியாக கூறினார் (எண். 1:1,3). மேலும், புதிய ஏற்பாட்டு காலத்தில் ஆண்டரவாகிய இயேசு கிறிஸ்து பிறந்த பொழுது ரோம அரசாங்கத்தால் உலகம் முழுவதும் மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடங்கப்பட்டது. அப்போது யோசேப்பும், மரியாளும் அதில் கலந்து கொள்ளும்படி கலிலேயா நாட்டிலுள்ள நாசரேத் என்னும் ஊரிலிருந்து யூதேயா நாட்டிலுள்ள பெத்லகேம் என்னும் தங்களுடைய சொந்த ஊருக்குச் சென்றார்கள். அப்பொழுது மரியாளுக்கு பிரசவம் நேரிட்டது. அந்த பெத்லகேம் ஊரிலே இயேசு பிறந்தார். அதன் பிறகு ரோம அரசாங்க சட்டப்படி அவர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்த பிறகு பெத்லகேமிலே ஒரு வீட்டிலே இருந்தார்கள் (லூக். 2:1,7; மத். 1,11).

மக்கள் தொகைக் கணக்கெடுப்பு தேவனுக்கு விரோதமானது என்றால் தேவன் யோசேப்புக்கும், மரியாளுக்கும் சொல்லியிருப்பார். இதில் கலந்து கொள்ள வேண்டாம் என்று. ஆனால் தேவன் அவர் களுக்குச் சொல்லவில்லை. ஏனென்றால் எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன் என்று வேத வசனம்

கூறுகின்றது (ரோமர் 13:1) எனவே, இந்த அறுநூற்றருபத்தாறு என்ற எண் ஆதார் கார்டை அர்த்தப்படுத்தவில்லை.

சில போதகர்கள் இந்த எண் அந்திக் கிறிஸ்துவைக் குறிக்கிறது என்றும் அவன் இன்னும் வரவில்லை அவன் வந்து இந்த அறுநூற்றருபத்தாறை நெற்றியில் எழுதுவான் என்றும் போதித்து வருகிறார்கள். ஆனால், வேத வசனம் முதல் நூற்றாண்டிலேயே அந்திக் கிறிஸ்து வந்துவிட்டான் என்று கூறுகிறது. கி.பி. 90ல் அப்போஸ்தலனாகிய யோவான் அந்திக் கிறிஸ்து வந்துவிட்டான் என்று எழுதுகிறார் (1 யோவான் 2:18). ஆகவே, இனிமேல் அந்திக் கிறிஸ்து ஆட்சி வரும் என்றோ, அப்போது இந்த எண் நெற்றியில் எழுதப்படும் என்றோ இந்த அறுநூற்றருபத்தாறு அர்த்தப்படுத்தவில்லை. இதுபோன்ற மனித யூகங்கள், மனித போதனைகள் நிறைய உள்ளன மனித யூகங்களுக்கும், மனித போதனை களுக்கும் இந்த எண் அப்பாற்ப்பட்டிருக்கிறது.

## II அறுநூற்றருபத்தாறு எதை அடையாளப்படுத்துகிறது?

வெளிப்படுத்தின விசேஷம் புத்தகமானது முதல் நூற்றாண்டில் துன்பப்படுகிற கிறிஸ்தவர்களுக்கு முக்கியமாக ஆறுதல்படுத்தவே எழுதப்பட்டது. முதல் நூற்றாண்டில் ரோம அரசன் டொமிஷியன் என்பவன் கிறிஸ்தவர்களை மிகவும் துன்பப்படுத்தினான். அதனால் நிறைய கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டனர். அவன் மிருகமாக கிறிஸ்தவர்களுக்கு இருந்தான்.

வெளிப்படுத்தின விசேஷம் 13 ஆம் அதிகாரத்தில் சாத்தான் கிறிஸ்தவர்களை நேரடியாகத் தாக்காமல் தனது ஏஜெண்டுகள் மூலமாகத் தாக்குவதைக் கூறுகின்றது. சாத்தானின் அதாவது வலுசர்ப்பத்தின் ஏஜெண்டாக முதலாவது ரோம அரசன் மற்றும் ரோம அதிகாரிகளைக் குறிக்கின்றது. (வெளி. 13:1,10) ரோம அரசாங்கத்தின் மூலமாக கிறிஸ்தவர்களை பிசாசானவன் துன்புறுத்தி அநேகரைக் கொன்றான். பரிசுத்தவான்களுடைய பொறுமையும், விசுவாசமும் இதிலே விளங்கினது (வெளி. 13:10). இன்றும் இப்படிப்பட்ட கொடுமையான அரசாங்கம் வரலாம்! அல்லது கொடுமையான மனிதர்கள் சுவிசேஷத்திற்கு எதிராக இருக்கலாம். ஆகவே தான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மனுஷரைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்றார் (மத். 10:17). ஆகவே முதல் மிருகமாக சுவிசேஷத்தை எதிர்க்கும் மனுஷரைக் குறிக்கிறது.

இரண்டாவது வந்த மிருகமானது சாத்தானின் இன்னொரு ஏஜெண்டாக கள்ளகத்தீர்க்கதரிசியாக செயல்பட்டது. அது பெரிய அற்புதங்களைச் செய்தது (வெளி. 13:11,17) அப்போஸ்தலனாகிய பவுல் கள்ளப்போதகர்களைக் குறித்து எச்சரிக்கையாக இருக்கச் சொல்லி எழுதுகிறார். அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானின் செயலின்படி சகல வல்லமையோடும், அடையாளங்களோடும்

பொய்யான அற்புதங்களோடும் இருக்கும் என்று எழுதுகிறார் (2 தெச. 2:9). ஆண்டவராகிய இயேசு கிறிஸ்வும் கள்ளக் கிறிஸ்துக்களும், கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி கூடுமானால் தெரிந்து கொள்ளப் பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களை யும், அற்புதங்களையும் செய்வார்கள் என்றார் (மத். 24:24).

வெளி. 13 ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட சமுத்திரத்தி லிருந்து வந்த மிருகமும், பூமியிலிருந்து வந்த மிருகமும், வலு சர்ப்பத்தின் அதிகாரத்தைப் பெற்றிருந்தபடியால் வலுசர்ப்பத்தையே வணங்கும்படி செய்தன. (வெளி. 13:4) ஆகவே சமுத்திரத்திலிருந்து வந்த மிருகத்தின் அடையாளம் சுவிசேஷத்தை எதிர்க்கும் அதிகாரம் படைத்த மனுஷர்கள். பூமியிலிருந்து வந்த மிருகம் சுவிசேஷத்தைப் புரட்டிப் போதிக்கும் கள்ளப் போதகர்களாகிய மனுஷர்கள். வலு சர்ப்பமானது சாத்தான் (வெளி. 12:9). இம்மூவரும் ஓர் அணியாக, கூட்டணியாக செயல்படுவதைப் பார்க்கலாம். இந்த மூவரையும் அடையாளப்படுத்தும் எண் அறுநூற்றருப்பதாறு ஆகும்.

மேலும், இந்த இலக்கம் பூரணப்பட்டதல்ல என்பதையும் குறிக்கிறது. எப்படியென்றால் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் ஏழு என்ற எண் பூரணப்பட்டது என்றும் அது தேவனுக்கும், கிறிஸ்துவுக்கும், பரிசுத்த ஆவியானவருக்கும் அடையாளமாகச் சொல்லப்படுகிறது (வெளி. 1:4) இந்த ஏழு என்ற எண்ணுக்கு ஆறு என்ற எண் பூரணப்பட்டதல்ல குறைவான எண் ஆகும். அதாவது சாத்தானும், சுவிசேஷத்தை எதிர்க்கின்றவர்களும், கள்ளப் போதகர் களும் பூரணப்பட்டவர்கள் அல்ல. தேவனுடைய அதிகாரத்திற்கும், வல்லமைகளுக்கும் எதிர்க்க திராணியற்றவர்கள். ஆகவே, அவர்களுக்கு பயப்படத் தேவையில்லை என்பதைக் குறிக்கின்றது. எனவே இனிமேலாவது இந்த அறுநூற்றருபத்தாறு பற்றி பயமும், கலக்கமும் இல்லாமல் இருக்கும்படியாக தேவன் வழிநடத்துவாராக!

### III அறுநூற்றருபத்தாறு என்ற எண்ணின் முடிவு

இந்த இலக்கத்தின் அடையாளம் சாத்தானும், சுவிசேஷத்தை எதிர்ப்பவர்களும் கள்ளப்போதகர்களையும் குறிக்கிறது. இவர்களின் முடிவைக் குறித்து தேவன் வேதத்தில் வெளிப்படுத்தியுள்ளார். அவை களைப் பார்ப்போம். சாத்தானின் கூட்டணியிலுள்ள சுவிசேஷத்திற்கு எதிராளியான மிருகமும், கள்ளத் தீர்க்கதரிசியும் நியாயத்தீர்ப்பின் நாளின்போது பிடிக்கப்பட்டு தண்டனை அடைவதைக் குறித்து வேத வசனம் தெரிவிக்கிறதைக் கவனியுங்கள். அப்பொழுது மிருகம் பிடிக்கப்பட்டது மிருகத்தின் முன்பாகச் செய்த அற்புதங்களால் அதின் முத்திரையைத் தரித்தவர்களையும் அதின் சொரூபத்தை வணங்கினவர் களையும், மோசம் போக்கின கள்ளத் தீர்க்கதரிசியுங் கூடப் பிடிக்கப் பட்டான். இருவரும் கந்தகம் எரிகிற அக்கினிக் கடலில் உயிரோடே தள்ளப்பட்டார்கள். சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும்


மனதர்களுக்கும், கள்ளப்போதகர்களின் வார்த்தைக்குப் பயந்து கொண்டு அவர்கள் சொற்படி நடக்கிறவர்களுக்கும் நியாயத்தீர்ப்பு நாளிலே தண்டனை பெறுவார்கள் என்று வேத வசனம் கூறுகின்றது. (வெளி. *19:19,27*).

அடுத்து, சாத்தானின் முடிவு குறித்து வேதம் கூறுகின்றது மேலும் அவர்களை மோசம் போக்கின பிசாசானவன் மிருகமும் கள்ளத் தீர்க்கதரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும், கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும், பகலும் சதாகாலங் களிலும் வாதிக்கப்படுவார்கள் (வெளி. *20:10*) இது குறித்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறும் பொழுது பரலோகத்திலி ருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே!! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா! உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லாவ. உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா என்பார்கள். அப்பொழுது நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை அக்கிரமச் செய்கைக்காரரே என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன் என்று கள்ளப் போதகர்களைக் குறித்துச் சொல்லுகிறார் (மத். *7:21,23*) மேலும் அவர் கூறும்பொழுது தேவனுடைய சித்தப்படி செய்யாதவர்களைப் பார்த்து சபிக்கப்பட்ட வர்களே என்னை விட்டு பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும், ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள் என்று சொல்லுவேன் என்றார் (மத். *25:41*). எனவே இந்த அறு நூற்றருபத்தாறு அடையாளப்படுத்தும் கூட்டணியின் முடிவு இரண்டாம் மரணமாக உள்ளது. நாம் இவர்களைக் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ☆

**(தொடரும்)**

**இயேசுவின் போதனை வல்லமையானதாக இருந்ததற்கான சில காரணங்கள்**

1. அவர் ஜனங்களை மரியாதையோடு நடத்தினார் (மாற்கு 10:46-52)
2. அவர் வெளிப்படையாகப் பேசினார் (யோவான் 1-3; மத். 13; மத். 4:19; யோவான் 4:1-4)
3. அவர் இரக்கம் நிறைந்தவராய் நடந்தார் (மாற்கு 8:2; லூக். 13:34)
4. அவர் பட்சபாதமில்லாதவராக இருந்தார் (மத். 8:2,3; மத். 19:4; மாற்கு 10:21)
5. அவர் ஆழமான மனிதத் தேவைகளை சந்தித்தார் (யோவான் 9:1-38)
6. அவர் அதிகாரம் உடையவராகப் பேசினார் (மத். 7:28,29; 4:4-10)
7. அவருடைய போதனையும், வாழ்க்கையும் ஒரே மாதிரியாக இருந்தது (எபிரெயர் 4:15; யோவான் 8:29,46; 1 பேதுரு 1:19)



**World Evangelism**
**Gospel Media**


## Arjunan in Tamil on Tamilan TV & Radio:
TV:Every Monday 6.00-6.15 a.m and Every Saturday 6.15-6.30 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile: 9443558041)

## Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV:
TV:Every Sunday 6.00 p.m and Saturday 8.00 a.m.
Every Wednesday 6.30 p.m and Thursday 2.30 a.m **on Rakshana TV:** (ANDRAPRADESH Contact Phone: 08842363722)

## P.R.Swamy & Douglas in Tamil on Radio:
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNADAKA Contact Mobile: 09844 70763)

## P.K.Varghese in Malayalam on Hindi TV:
TV:Every Saturday 6.00-6.30 a.m on Jai Hindi Channel. (KERALA Contact Mobile: 9447035465)


## Philemon & Kingsley in Tamil on Tamilan TV:
TV:Every Tuesday 9.30-9.45 p.m and Every Sunday 6.45-7.00 a.m. (TAMILNADU Contact Mobile: 9244214421)




## Sunny, Francis & Vinay David in Hindi on Hindi TV:
TV:Every Tuesday 7.00-7.30 on Shubh Sandesh Hindi Channel. (NEW DELHI Contact Mobile: 09810896789)


2013, ஜுன் மாத நற்செய்திக் கூட்டங்களை சிறப்பாக நடத்தியவர்களில் சிலர்










Regd. News Paper RNI No. 47661/87
Postal regn. No. Erode/26/2012-2014
Posted at Erode HPO on 20/21 of Every Month.
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2012-2014**







சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- ஆசிரியர்

தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்








# திருமறை தியானம்

## தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் | TV | வியாழன் | இரவு | 9:30 | மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 | மணி |








# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்


- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட **100** பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

**விருப்பமுள்ளவர்கள்**
**மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.**



இயக்குனர்
# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.